விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | தை 29 | ஜ, ஆகி 1 | இதழ் 1
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 11-2-1986

UNIVERSITY OF JAFFNA SRI LANKA
RECEIVED
11-2-1986
PERIODICALS DIVISION
LIBRARY

## பலாலி, யாழ்.கோட்டை:
## இளைஞர்களைப் பார்வையிட தாய்மாருக்கு இன்று அனுமதி

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலும், யாழ். கோட்டை முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை இன்று பார்வையிடுவதற்கு அவர்களின் தாய்மாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் இரா

[5-ம் பக்கம் பார்க்க]

## வேலைநிறுத்தம்:கண்டனக்கூட்டம்
## மலையகம்,கிழக்குப்பகுதிக்கும் விஸ்தரிக்க முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில்ஆயிரம்மீ.பாதுகாப்பு வலயத்தை அகற்றக் கோரியும், ராணுவத்தினரை வாபஸ் பெறக் கோரியும் நடத்தப்படவிருக்கும் அடையாள வேலைநிறுத்தம் மற்றும் 50 கண்டனக்கூட்டங்கள் குறித்து நேற்று ஆராயப் பட்டது.

(5-ம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கியால் சுடப்பட்டு காருடன் கொளுத்தப்பட்டனர்!

## யாழ்.வர்த்தகர் மூவருக்கு வன்னியில்நடந்தபயங்கரம்

(ஏ. வி. மாணிக்கமும், நமது வவனியா நிருபரும்)

யாழ். நகரிலிருந்து சிலாபம் நோக்கி காரொன்றில் சென்ற பிரபல தமிழ் வர்த்தகர்கள் மூவர், வவனியாவில் நேற்றுக்காலை துப்பாக்கிச்சூட்டுக்கிலக்கானதுடன், காருடன் சேர்த்து தீமூட்டி எரிக்கப் பட்டனர்! இப்பயங்கரமான சம்பவம் வவனியாவிலிருந்து இரண்டு மைல் தூரத்தில், வவனியா-யாழ். வீதியில் கொக்குவெளி என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது!

ரி. யேசுநாயகம் (36 வயது), 3ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்) இரு குழந்தைகளுக்குத் தந்தை இவரது லொறிதான் சிலாபத்தில் விபத்துக்குள்ளானது. 7 ஸ்ரீ 8651 இலக்கமுடைய தமது 40' 'பேஜோ' காரில் இவர் சென்றுர். இக் கார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியுடையது. 75 ஆயிரம் ரூபா ரொககப்பணமும் வைத்திருந்தார். கைக்கடிகாரம், மோதிரம் அணிந்திருந்தார்.

ஆர். வி. ஜி ஸ்தாபனக் கணக்கப்பிள்ளை பொன்னையா மயில்வாகனம் [44 வயது] பளையில் விவாகம் செய்தவர் 3 பிள்ளைகளுக்குத் தந்தை.

மனுவேல் வின்சன்ட் [மனேன்] 44 வயது. விவாகம் செய்து 8 மாதம் அரச மருந்

[5ம் பக்கம் பார்க்க]

## தமிழர்கட்கு அவதூறு:
## பிரதி அமைச்சருக்கு நீலன் கண்டனம்

(கொழும்பு)

'இலங்கையில் தமிழர்கள் தொழில் வாய்ப்பு பெறமுடியாத நிலையில் வெளிநாடுகளுக்குச் சென்று கஷ்டமான நிலையில் தொழில் புரிந்துவரும் வேளையில் இலங்கையின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்ணண்டோ தமிழர்கட்கு எதிராக அபத்தமான குற்றம் சுமத்தியிருப்

(5-ம் பக்கம் பார்க்க)

## மரணவிசாரணையில் திடுக்கிடும் தகவல்கள்

(வவனியா)

வவனியா மன்னர் வீதி ஆறும்கட்டையில் வைத்து சீருடையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வவனியா கமநல சேவை இலாகா சிரேஷ்ட தொழில்நுட்பஅதிகாரி ஜோக்கிம் பிரேமானந்தாவின் மரணம் கொலை என்று விசாரணை நடத்திய அதிகாரி தீர்ப்பளித்துள்ளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட மாணவி விடுவிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்ட தமது இனத்தைச் சேர்ந்த மாணவி நேற்று நண்பகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். நகர் 24மனை செட்டியார் மகாஜன சங்கம் அறிவித்துள்ளது.

கடத்தப்பட்ட மாணவியைக் கண்டுபிடிப்பதற்கு சகலவழிகளிலும் உதவி வழங்கிய புனித விடுதலை இயக்கங்கள், வர்த்தக சங்கம், பொது நல சேவை சங்கங்கள், பொதுமக்கள், பத்

(5-ம் பக்கம் பார்க்க)

## மாணவர் பகிஷ்கரிப்பு

(வவனியா)

நெளுக்குளம் அரசினர் பாடசாலையைச் சேர்ந்த சுமார் 740 மாணவர்கள் கடந்த 6ம் திகதி வகுப்புக்களை பகிஷ்கரித்துள்ளார்கள்.

## "உடன்பாட்டை கூட்டணி உதாசீனம்செய்தது!"

### அமைச்சர் லலித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

''இனப்பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளின் அடிப்படை குறித்து இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்பாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி உதாசீனம் செய்தது'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

புதுடில்லியில். இலங்கை அரசின் பிரதிநிதி கலாநிதி ஹெக்டர் ஜெயவர்த்தனவுக்கும், இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரிக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை அனுசரித்து நடக்க தமிழர் கூட்டணி தவறிவிட்டதாக குற்றம் சாட்டிய அமைச்சர் லலித் அத்துலத் முதலி; ''தமிழீழம், வடக்கு, கிழக்கு இணைப்பு'' என்ற பேச்சுக்கே இடமில்லை. அதிகாரப்பரவலாக்கல் என்பது பற்றித்தான் பேசப்படும் என்று இருவரும் உடன்பாட்டுக்குவந்தனர். இந்த அடிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## கணேஷின் இறுதிக் கிரியை: திரளான மக்கள் அஞ்சலி

(மட்டக்களப்பு)

பட்டிருப்பு முன்னள் எம். பி. திரு. பி. கணேசலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் நேற்று மட்டக்களப்பு கல்வியங்காட்டில் நடைபெற்றது.

கலாநிதி நீலன் திருச்செல்வம், காத்தான்குடி உள்ளூராட்சி முன்னள் தலைவர் ஐனுப் அஹமட் லெப்பே, மட்டக்களப்பு அரசாங்க அதிபர்

(5ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பேச்சுவார்த்தை: இலங்கைத் தூதர் டில்லி விரைவு

இதேசமயம் இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தின பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கக்கோரும் இலங்கை அரசின் உத்தியோக பூர்வ செய்தியை கொழும்பிலிருந்து டில்லிக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

ஒருவார காலம் கொழும்பில் ஆலோசனை நடத்தியபின் தூதுவர் திரு திலகரட்ண டில்லி திரும்பியுள்ளார்.

இலங்கை அரசின் யோசனை குறித்து தமிழர் விடுதலை கூட்டணி மறுத்ததைத் தொடர்ந்து திரு ரொமேஷ் பண்டாரியின் விஜயம் ரத்தானதுபற்றியும் இச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## பருத்தித்துறை நகர் தொடர்ந்து வெறிச்சோடிக் காணப்படுகிறது

(புலோலி)

பருத்தித்துறையில் தொடர்ந்தும் பதற்றமும், பீதியுமே நிலவுகிறது.

பொதுமக்கள் பெரும் அவஸ்தைப்பட்டு வருகின்றனர்.

பருத்தித்துறை நகரின் சகல செயற்பாடுகளும் ஸ்தம்பித்துள்ளன. நகர்ப்பகுதி மனித நடமாட்டமின்றி வெறிச்சோடி இருக்கின்றது.

நேற்றுக்காலை சிவன்கோயிலடியிலும், மருதடியிலும் மரக்கறிச் சந்தைகள் இயங்கின. மருதடியில் உள்ள தனியார் காணியொன்றிலேயே மீன் சந்தையும் நேற்று இயங்கியது.

பருத்தித்துறை நகரசபைக் கந்தோர், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கிகளும், நீதிமன்றங்களும் மூடப்பட்டே இருக்கின்றன.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறையில் ஏற்பட்ட திடீர் தாக்குதல்களையடுத்தே தொடர்ந்தும் இந்நிலை பருத்தித்துறையில் நிலவிவருகின்றது.

## 2 வர்த்தகர்களும் விடுவிக்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கடத்தப்பட்ட இரு வர்த்தகர்களும் நேற்று மாலைவரை விடுதலை செய்யப் படவில்லை என்று யாழ். வர்த்தக சங்கச் செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் தெரிவித்தார்.

இவ்விருவரும் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர் என்றும், இதுபற்றிச் சங்

[8ம் பக்கம் பார்க்க]

## மகாபொல புலமைப்பரிசில் மாணவர் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

மகாபொல புலமைப்பரிசில் பெறுவதற்கு கொழும்பு செல்லவிருக்கும் யாழ். பல்கலைக்கழக முதல்வருட மாணவர்களுக்கு, மாணவர் அவை பின்வரும் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

''இம்மாதம் 14-ம் திகதி மகாபொல புலமைப்பரிசில் எடுக்கச் செல்லும் மாணவர்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள A 50 கார் கறுப்பு நிறம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: மரியநாயகம் ஸ்ரோர்ஸ், 55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். C 656

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். தொடர்பு: சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 655)

தேக்க மரத்திலான அலுமாரியொன்று விற்பனைக்குண்டு. K. தர்மானந்தன், வாலையம்மன் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (C 682)

## தேவை

மோட்டார் றீ-வைண்டிங் வேலை தெரிந்தவர், வேலைபழக விரும்புபவர் நேரில் வரவும், ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழநாட்டிற்கு முன்பாக] (C 694)

## கல்வி

க. பொ. த. [உயர்] 88 கலை, வர்த்தக மாணவர்களுக்கு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 14-02-1986. தரம் 10 பரீட்சை முடிவு வரும் வரை கல்வி இலவசம். Modern Education Centre, Karaveddy. [C 592]


## வகுப்புகள்

(1) City and Guilds of London Institute Part II-1987 [2] மோட்டார் றீவைண்டிங். [3] வயறிங் ஆகிய வகுப்புக்கள் 01-03-86 ஆரம்பமாகிறது. ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] [C 642]

## தவறிவிட்டது

தம்பிஐயா சிவராஜா என்பவருடைய சேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் M. M. V. வசாவிளான் என்ற விலாசத்துக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும். (C 692)

### 3-ம் வருட நினைவு அஞ்சலி



இரட்ணசிங்கம் விக்டர் பத்மரட்ணம்
(Fisheries Inspector)

மலர்வு: 30-11-1936
உதிர்வு: 11-02-1983

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 14 - 02 - 86 வெள்ளிக்கிழமை மாலை 5-30மணிக்குவயாவிளான் உத்தரியமாதா ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

நானிருக்கப் பயமேனென
நாளெல்லாம் கூறினீரே
மனமிருக்கும் காலம்வரை
மங்காத உம் நினைவும்
படர்ந்துவிட
நெஞ்சத்திலே
பயமின்றி வாழ்ந்திடவே
தொடர்ந்துவரும்
காலமெலாம்
தொழுதிடுவோம்
உம்நினைவை

பிரிவின் துயரில் தேவசித்தத்தை ஏற்கும்

மனைவி, மக்கள்,
மருமகன், தாய்,
சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்,
''றட்ன ஜோதி'',
வயாவிளான்.
(C 672)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



சின்னத்தம்பி வல்லிபுரம்
(ஓய்வுபெற்ற பொது வேலைத் திணைக்கள எழுதுவினைஞர்)

தோற்றம்: 7-9-1916
மறைவு: 13-1-1986

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்துவிட்ட எங்கள் அன்புத்தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களிற்கும் அனுதாபந் தெரிவித்தவர்கட்கும் எம்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 12-2-1986ந் திகதி புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடனழைக்கின்றோம்.

குடும்பத்தினர்,
தளக்கந்தை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி
C 565

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

மிருசுவில் உசனைச்சேர்ந்த காலம் சென்ற பெரியதம்பி ஐயாத்துரைஎன்பவரின்மரணசாதனமில்லா மரணச் சொத்தும் உடமைப் பொருட்களிதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

பெரியதம்பி ஐயாத்துரை
கைம்பெண் கனகேஸ்வரி,
மிருசுவில், உசன்.

விண்ணப்பகாரர்

இல. 200 / ரீ
தத்துவம்

எதிராக

1. ஐயாத்துரை தயாபரன்
2. சந்திரசேகரன் ரவீந்திரனும் பெண்
3, சாந்தினி ரவீந்திரன் பராயமற்றவர்
4. ஐயாத்துரை சிவபரன் பராயமற்றவர்
5. ஐயாத்துரை கமலாதரன் பராயமற்றவர்
6. பெரியதம்பி ஐயாத்துரை மகள் நிமால்நிதி எல்லோரும் மிருசுவில் உசன் (பராயமற்ற 4ம்,5ம்,6ம். எதிர்வாதிகளின்வழக்குக் காவலன் மேற்கூறிய 1ம் எதிர்வாதி)

எதிர்வாதிகள்

### பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1986ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

ஆ. குணநாயகம்
பதிவாளர்.

தயாரித்தவர்:
எஸ். கந்தசாமி
ஜே பி., யு. எம்.
விண்ணப்பகாரரின் சட்டத்தரணி.

காரணம்காட்ட திகதி 17-2-86க்கு நீடிக்கப்பட்டது.

ஆ குணநாயகம்
பதிவாளர்
C 653 24-1-86.

சி. கனகரத்தினம்
ஜே. பி. யூ. எம்.
உதவியாளர்: கனகரத்தினம் கேசவன் ஜே. பி. யூ. எம்.
சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தாரிசுக்களும்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ—பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், றக்கா வீதி. 81ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் பொன்னம்பலம் சின்னத்தம்பி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

சின்னத்தம்பி நிர்மலநாதன், 81, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இ. T/3835

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1985 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 02ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி. அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
(ஒப்பம்)
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
க. கேசவன்,
((ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.

1985ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
29-01-86

காரணம் காட்டுவதற்கான திகதி 14-02-86 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

க. நாகேந்திரம்,
பதிவாளருக்காக.
(C 553)


# I·C·M·A· SECTION B

INTENSIVE COURSE
(WEEKDAY CLASSES)

Date of Commencement:
14-02-86

FULL FEES: Rs. 200/- ONLY.

விரிவுரையாளர்கள்:

M. S.: பிரபல விரிவுரையாளர்
LAW: Mr. யூஜின் மரியாம்பிள்ளை
O.P: Mr. R. N. வரேந்திரன்

கன்ரேபியா கல்வி நிறுவனம்
(SHOOT OF OXONIA, COLOMBO)
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201
(A 229)


## வைத்தியசாலை அபிவிருத்திச் சபை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராம வைத்தியசாலையின் குறைபாடுகளை அகற்றி அதனை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு வைத்தியசாலை அபிவிருத்திச்சபை அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் நீண்டகால தேவைகளாக இருந்துவரும் பிரவசவாட் அமைத்தல், டாக்டர்ளுக்கு தங்கும் விடுதி நிறுவுதல், நிர்வாக அலுவலகம் அமைத்தல், சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், வைத்தியசாலைக்கு செல்லும் வீதியைத் திருத்தல் போன்ற முக்கிய விடயங்களில் இச்சபை கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்வது என்று பொதுக்கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் நிர்வாகிகள்தெரிவு நடைபெற்ற போது பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:
தலைவர்: எஸ் மாட்டின்.
உப தலைவர்: அ. வ. துரையப்பா.
செயலாளர்: ச. செல்வரட்ணம்.
உப செயலாளர்: அ. லூயிஸ்
பொருளாளர்: எஸ். சந்தியாப்பிள்ளை.
செயற்குழு உறுப்பினர்காள 11 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
நடராசா
மோகனதாஸ்
(முன்னாள் சித்திர ஆசிரியர், கிளிநொச்சி ம. வி)

அன்னையின் மடியில்:
21-01-1960

ஆண்டவன் மடியில்:
24-02-1985

எங்கள் வாழ்வின் கலங்கரைவிளக்கமாகவிளங்கி அக்கிரமக் காரரால் அநியாயமாக உயிர்நீத்த எம் அன்புச்செல்வம் மறைந்து ஓராண்டாகின்றது. அன்னரது மறைவின் ஓராண்டு நிறைவினை 13-2-86 வியாழக்கிழமை கிளிநொச்சி ஏழாம் வாய்க்கால் குருகுலத்தில் நடாத்தவுள்ளோம். அவ்வமையம் உற்றுர், உறவினர், நண்பர்கள் யாவரையும்அமரரின் ஆன்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

மோகனதாசின் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.
[C 684]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ் ஜனதிபதி தேர்தல்: முடிவுகள் வெளியாவதில் இழுபறி!

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனதிபதி தேர்தல் முடிவுகள் வெளியிடுவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

தேர்தல் முடிவுகளை எண்ணும் 'கம்பியூட்டர்' இயக்குநர்கள் வாக்கு எண்ணிக்கையில் மோசடி செய்யப்படுவதாகவும், முரண்பாடுகள் காணப்படுவதாகவும் கூறி வெளிநடப்பு செய்ததைத் தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசதேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள தேர்தல் முடிவுகளின்படி ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப்பெற்று ஜனதிபதி மாக்கோஸ் முன்னணியில் இருப்பதாகவும், திருமதி அக்வீனோ நாற்பத்தொன்பது சத வீத வாக்குகளைப்பெற்றிருக்கையில் திரு. மாக்கோஸ் ஐம்பத்தொரு சதவீத வாக்குகள்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கின்றன.

ஆனல் திருமதி அக்கினோ எட்டு லட்சத்து எழுபதாயிரம் வாக்குகள் அதிகம்பெற்று ஐம்பத்துமூன்று சதவீத வாக்குகளுடன் முன்னணியில் இருப்பதாக சுதந்திர தேர்தலுக்கான தேசிய குடிமக்கள் இயக்கம் 'நான்சரில்' என்னும் சுயேட்சை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுஇவ்வாறு இருக்க, வாக்குகளுக்கு விலைகொடுத்தல், அத்துமீறல், வாக்குப் பெட்டி பறிமுதல், தேர்தல் முடிவுகளை மாற்றுதல் போன்ற தேர்தல் முறைகேடுகள் நடைபெறுவதாக தேர்தலைக் கண்காணிக்கும் பத்தொன்பது நாடுகளின் பார்வையாளர் குழு கூறுகிறது. (பி)

## மாலைதீவு விஜயம் குறித்து இந்திய பிரதமர் திருப்தி

(புதுடில்லி)

''இந்தியாவும் - மாலைதீவும் நெருங்கி வருவதற்கும், உறவுகளை விருத்திசெய்து கொள்வதற்கும் மாலைதீவுப் பயணம் வழிசெய்தது'' என்று இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் கூறினர்.

இருதரப்பு உறவுகளில் எதிர்வரும் ஆண்டுகளில் ஒத்துழைப்பு நிறைந்திருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர் காந்தி, சர்வதேசப் பிரச்னைகளில் இரு நாடுகளும் பொதுவான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன என்ருர் (பி)

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(புதுடில்லி)

கான்பூர் அரசஊழியர்களின் இருபத்தைந்து நாள் வேலைநிறுத்தம்; மாநில வேளாண்மைத்துறை அமைச்சர் திரு நரேந்திரசிங்கிற்கும், ஊழியர் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்றுமுன் தினம் நடந்த சமரசப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து கைவிடப்பட்டது. (பி)

## சர்வதேச கீதை மாநாடு

(புதுடில்லி)

உலகசகோதரத்துவம், சமாதானம், ஒற்றுமையை வளர்ப்பதில் குறிக்கோளாகக் கொண்ட ஏழாவது சர்வதேச கீதை மாநாடு நேற்றுமுன் தினம் அலகாபாத்தில் ஆரம்பமானது.

துறவிகள், அறிஞர்கள், உலகின் பல்வேறு மதங்களின் மதத்தலைவர்கள் அடங்கிய சுமார் ஐந்நூறு பிரதிநிதிகள் இந்த சர்வதேசகீதை மாநாட்டில் கலந்துகொள்வார்கள் (பி)

## மாதகல் வாசிகள் ஆர்வத்துடன் கையொப்பம்

[பண்டத்தரிப்பு]

பத்து லட்சம் கையொப்பம் வாங்கிஜனதி திக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் மாதகல்பிரஜைகள் குழுவினரும அப்பகுதி மக்களிடம் கையொப்பம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருந்தொகையான மாதகல் கிராமவாசிகள் இப்பத்திரங்களில் ஆர்வத்துடன் தங்களது கையொப்பங்களை இட்டுள்ளனர்.

## ''வறுமையில் வாழும் மக்களுக்கு பொதுநிறுவனங்கள் உதவவேண்டும்''

(வட்டுக்கோட்டை)

''கிராமங்களில் இருக்கின்ற பொது நிறுவனங்கள் யாவும் வறுமையில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் உதவ வேண்டும்'' என்று வட்டு-சிவன் ஐக்கிய நாணய சங்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய திரு.வி என்.இராசரத்தினம் கூறினர்.

''இன்று ஆரம்பமாகும் ஐக்கிய நாணயச் சங்கம் பல நன்மை பயக்கும் செயல்திட்டங்களை உருவாக்கி ஏழை மக்களின் வாழ்வை வளம்படுத்த பாடுபட வேண்டும்'' என்றும் அவர் மேலும் கூறினர்.

வட்டு-சிவன் ஐக்கியநாணய சங்கத்தின் நிர்வ கிகள்தெரிவு இடம் பெற்ற போது தலைவராக சி.சிவசிங்கராசாவும், உபதலைவராக மா. சண்முகவடிவேலும், செயலாளராக வி. என். இராசரத்தினமும், உப

(7-ம் பக்கம் பார்க்க)

## மூன்று பொலிஸார் உட்பட ஒன்பது பேர் பலி!

(கேப்டவுன்)

தென்னுபிரிக்காவில் டர்பான் நகர்அருகே நடந்த சம்பமொன்றில் மூன்று ஆபிரிக்கப் பொலிஸார் உட்பட ஒன்பது பேர் பலியானுர்கள்.

இருபிரிவினருக்கிடையே நடந்த பிரச்னை குறித்து புலனுய்வு மேற்கொள்ளச் சென்ற ஏழு பொலிஸாரை, துப்பாக்கிகள், ஈட்டிகள், தடிகள் சகிதம் ஆபிரிக்க தேசியவாதிகள் தாக்கியபோதே மேற்படிச் சம்பவம் நேர்ந்தது. (பி)

## கிராம அபிவிருத்திச் சங்கங்கள்: ''சட்டவிரோத மின் பாவனையை கட்டுப்படுத்த முன்வரவேண்டும்''

(வட்டுக்கோட்டை)

''திருட்டுத்தனமாக மின்சாரம் பாவிப்போர் தொகைஇப்போது கூடுதலாக அதிகரித்துள்ளது சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்துள்ளமையை சாதகமாகப் பயன்படுத்தி இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன் வர வேண்டும்.''

இவ்வாறு வட்டுக்கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு சி. இராசதுரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட்டுக்கோட்டை காந்திஜீ கிராம முன்னேற்றச் சங்கமும் சனசமூக நிலையமும் நடாத்திய கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ் வேண்டு கோளை விடுத்துள்ளார்.

இக் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பொன்மலர் சிவானந்தன் போரூட் ஸ்தாபன பிரதிநிதி எஸ் சண்முகதாசன், வட்டு-கிழக்கு கிராம சேவையாளர் எஸ் முருகேசு ஆகியோர் கலந்து கொண்டு கருத்துத்தெரிவித்தனர்.

## ''எழுத்தாளர்கள் நல்லது கெட்டது இரண்டையுமே எழுதவேண்டும்''

### 'மருதாணி' வெளியீட்டு விழாவில் கருத்து

(யாழ்ப்பாணம்)

''ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் தென் இந்தியாவைப் பார்த்து இலக்கியங்கள் படைத்துக் கொண்டிருந்தபோது நாம் வாழும் மண்ணைவைத்து முதன்முதலாக நாவல் எழுதியவர் 'இளங்கீரன்' ஆவார். இவர்போன்ற பல இலக்கிய கர்த்தாக்கள் பிறந்த இந்த முஸ்லிம் மண்ணில் இன்று ஒரு கலைஇலக்கிய சஞ்சிகை வெளியிடப்படுகிறது என்ருல் அது பரம்பரைபரம்பரையான எழுச்சியே ஆகும்'' என்று யாழ். 'ஒஸ்மானியாக்' கல்லூரியில் நடைபெற்ற 'மருதாணி' கலை, இலக்கியசஞ்சிகை வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் மௌலவி கே எம் எச். காலிதீன் தலைமையில் வெளியீட்டுவிழா மேற்படி கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றது. ஆய்வுரையில் கலாநிதி மௌனகுரு தொடர்ந்து கூறியதாவது:-

''அறிஞர் பரம்பரை, முஸ்லிம் மக்களில் என்றும் இருந்தே வருகின்றனர் பிரச்னைகள் நல்லது கெட்டது சகல சமூகங்களிலும் உண்டு. எந்த ஒரு சமூகமும் மேலானது என்று தம்மை உரிமை கொண்டாடமுடியாது எழுத்தாளர்கள் சமூகஉணர்வுடன் நல்லது கெட்டது என்று இரண்டையுமே எழுத்தில் வடிக்க வேண்டும். யாழ்ப்பாணத்து வாழ் சமூகங்கள் தமிழ் சினிமாவினுல் பாதிக்கப் பட்டுள்ளன. தமிழ் சினிமாக்களால் பெரும்பாலும் வாழ்க்கையில் காண முடியாத அம்சங்களே நிறைய உண்டு. எனவே சினிமாவில் கேட்கின்ற கவிதைகளை எழுதக்கூடாது. கவிதை என்பது சொற்களைக் கொண்டு உணர்ச்சிகளைத் தட்டி விடத்தக்கதாக எழுதக் கூடியது. எழுத்துத் துறையில் ஆற்றல் உள்ளவர்களுக்கு அறிவும் ஆர்வமும் வேண்டும். இந்த 'மருதாணி' சஞ்சிகையில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியமாகவுள்ளது வரவேற்கத்தக்கதே. பெண்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களாகவும் கைப்பற்ற முயல்பவராகவும் இன்று உலகில் காணப்படுகின்றனர். 'பெண்கள் ஆண்டு' அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் 'மருதாணி' சஞ்சிகையைப் பெண்கள் அதாவது முஸ்லிம் பெண்மணிகள் வெளியிட்டுக்கொள்வது துணிச்சலான காரியமே'' என்ருர்.

அடுத்து உரையாற்றிய எம். எஸ். ஏ முக்தார் தமது உரையில், ''எமது யாழ்ப்பாண மண்ணில் பிறந்த, சிறந்த எழுத்தாளர்கள், எம்மத்தியில் எழுத்தாளர்களை உருவாக்கவும், வளர்க்கவும் எடுத்த முயற்சிகள் போதாது. எம்மவர் உயர்ச்சி அடைந்துவிட்டால் கொழும்பை நோக்கிப் போய்விடுகிருர்கள் பாடசாலை மாணவிகள், மாணவர்கள் முயற்சித்து இன்று மருதாணி சஞ்சிகையை வெளியிட்டுள்ளனர். பாடசாலைகள் உத்தியோகம் பார்ப்பதற்கான ஆட்களை உருவாக்குபவனவாக மட்டும் இருந்துவிடக்கூடாது, சமுதாயத்துக்கு வழிகாட்டும் எழுத்தாளர்களை உருவாக்கும் களமாக அமையவேண்டும்'' என்ருர்.

அடுத்துப்பேசிய எம். எஸ். அப்துல்ரஹீம் தமது உரையில், ''திரு, சி வை. தாமோதரம்பிள்ளை போன்றவர்கள் தமிழ் இலக்கியங்களை அச்சுவாகனமேற்றுவதற்கு முன்பாக ஆறுயிரம் பாடல்களை இயற்றிய பருதீன் புலவர் போன்றவர்கள் தமிழ் இலக்கியங்களை அச்சில் பதித்துள்ளனர். கி. பி. 12ம் நூற்றுண்டு தொடங்கி இஸ்லாமியர்கள் பலர் இலக்கியங்களைப் படைத்துவருகின்றனர். இவர்கள் கைபடாத இலக்கியங்களே இல்லை. நம் நாட்டில் உதித்த தமிழ் இலக்கியங்கள் இந்தியா சென்று சிறப்புப்பெற்ற காலமும்இருந்தது உள்ளதை உள்ளபடி கூறுவது வரலாறு. உள்ளதை உணர்ந்தபடி கூறுவது இலக்கியமாகும்'' என்ருர்,

திரு. பொன். மதிமுகராசா தமது உரையில் கூறியதாவது: ''முஸ்லிம் மக்கள் மொழி, இன போராட்டங்களில் என்றுமே பின்நிற்காதவர்கள் தமிழ் இனத்தைத் திருத்துவது மிக, மிக கஷ்டமான காரியமாகும். முக்காடிட்ட முஸ்லிம் பெண்கள் இன்று சமுதாயத்துக்கான அறிவுரைகளைக் கூற முன்வந்துவிட்டனர். முடங்கிக் கிடந்த இவர்களின் எழுச்சி சமுதாய இன்னல்களினுல் ஏற்பட்டுள்ளது. பெரிய இலக்கியகாரர்கள் சாதாரண மக்கள் விளங்கும்படியாகஎழுத்தாளர்களை எழுதும்படி அறிவுகட்ட வேண்டியது கடமையாகும்'' என்ருர்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் முதற்பிரதியைப் பெற்

[7ம் பக்கம் பார்க்க]

## யாழ். நீதவான் நீதிமன்றத்தில் புதிய வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இவ்வருடம் புதிதாக வழக்கொன்றும் தாக்கல் செய்யப்படவில்லை.

பொது மக்கள் புகார்களைச் செய்யப் பொலிஸ் நிலையம் செல்லத் தயங்குவதும் பொலிஸாரும் ஸ்தலத்திற்குச்சென்று விசாரணைகளை மேற்கொள்ளாதிருப்பதுமே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலை இல்லாததும் மற்ருெரு காரணம் எனக் கூறப்படுகிறது.

கடந்த வருட இறுதிப்பகுதியில் யாழ்.ஆஸ்பத்திரி சம்பவம் தொடர்பான வழக்கொன்றும் பண்ணைவிடுதி தொடர்பான வழக்கொன்றும்மட்டுமே தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த வருடமும் அதற்கு முன்னரும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மட்டுமே தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

சில வழக்குகளில் ஆஜரான சட்டத்தரணிகள் வெளிநாடு சென்று விட்டதால் வழக்குகள் தவணை போடப் பட்டதாகவும் சில வழக்குகளில் கட்சிக்காரர்கள்,சாட்சிகள் பதற்ற நிலை காரணமாக கோட்டிற்கு வராததினுல் தவணை போடப்படுவதாகவும் கூறப்படுகிறது. [க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

உன்துணை யன்றி யுயிர்த்துணைகாணேன்
பின்னை என்னைப் பிரியாதுறைவாய்
அன்னையுந் தந்தையும் ஆசானும் நீ
முன்னைப் பொருட்கெலாம் முன்னைப்பொருள் நீ

—சிவயோக சுவாமிகள்.

# நமதுநோக்கு

## பரந்துபட்ட பொறுப்பு மிகு புனித சேவை

“அரசாங்க நிர்வாகம் பொய் சொல்லக் கூசாது. அங்குள்ள அதிகாரிகளுடன் நான் பேசுவதே கிடையாது. ஏதேன் அறிய வேண்டுமானால் பத்திரிகையாளருடன் பேசுவேன்”

இவ்வாறு அடிக்கடி கூறி வந்தவர் காலஞ்சென்ற பிரபல அமெரிக்கச் செனட்டர் ஜேம்ஸ் டபிள்யூ. புல்பிரைட்.

பத்திரிகையாளரின் பொறுப்பும் பணியும் எவ்வாறு அதிகரித்து வருகிற தென்பதை அரசின் கட்டுப்பாட்டுக்கு அமெரிக்க பத்திரிகைகள் இலகுவில் அமைவதில்லை யென்பதையும் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் உரை நிகழ்த்திய பேராசிரியர் ஒல்சன் விவாதித்தார்.

‘நிக்ஸன் வாட்டர்கேட்’ எழுப்பிய நெருக்கடியையும் ஈற்றில் ஜனாதிபதி நிக்ஸன் கண்ணீரும் கம்பலையுமாக பதவிதுறக்க வேண்டி வந்ததையும் நடத்தி முடித்தது அமெரிக்காவின் பலம் வாய்ந்த பத்திரிகைசேவை.

இத்தகைய பலம் ஒருவருடத்திலோ பத்துவருடத்திலோ வளர்ந்ததல்ல, நியூயோர்க் டைம்ஸ் போன்ற சிறந்த தரத்தையுடைய பத்திரிகைகள் வளர பல்லாண்டுகள் கழிந்தன.

நிருபர்கள், எழுத்தாளர் ஆசிரியர்களின் தியாக சேவையால் முன்னேறிய அமெரிக்க பத்திரிகைகள் அமெரிக்க ஜனநாயக வாழ்க்கை முறைக்கு இடர் விளைக்கும் எத்தகைய சர்வாதிகாரத்தையும் இலகுவில் அனுமதிப்பதில்லை.

இந்த மரபின் பெருமையைப் பேணவே செனட்டர் அமரர் புல்பிரைட் இவ்வாறு உறைப்பாகக் கூறியிருக்கலாம்.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் மிகப் பழமையானவை: தரத்தில் எள்ளளவும் குறைந்தவையல்ல. ஆனால் அமெரிக்காவைப் போல் அல்லாது, பல்வேறு கோணங்களில் அரசியல் சித்தாந்த வேற்றுமைகளுக்கும் இடமளிக்க வேண்டியிருப்பதால் செய்தியின் புனிதம், எவ்வகையிலும் திரிக்கப்படவில்லை என்று சபதம் செய்ய இயலாது.

உதாரணமாக இன்றைய பிரதமர் திருமதி தட்சரும் ஒருசிறு வாட்டர்கேட் ஊழலில் அகப்பட்டிருக்கிறார் என்றும், அவர் தம்பதவியைக் கைவிடவேண்டும் என்றும் சில பத்திரிகைகள் விளாசிவிட்டாலும், அதுதான் உண்மை நிலையென்றும் அதற்கு கண்டனம் அதிகரித்து வந்தபோது அதனைச் சடைய பல நுணுக்கமான சக்திகள் முனையலாம். ‘ராஜினாமா’ விடயம் புஸ்வாணமாகலாம்.

உலகனைத்திலும் அரசியல் பொருளாதார சர்ச்சைகள் அளவுக்கு மிஞ்சி அதிகரித்து வருவதாலும் சுருங்கி வரும் உலகில் ஒரு நாட்டில் இன்னொன்றுதங்கியிருப்பதாலும், பத்திரிகை சேவை பல சிக்கல்களுக்குப் பலியாவதையும், ஈற்றில் பழம் பெரும் பத்திரிகைகள் இழுத்து மூடப்படுவதும் இன்றைய நிகழ்ச்சிகள்.

இந்தப்பின்னணியில் எங்கள் பத்திரிகையின் 27 ஆண்டு சேவை முடிவில் யாழ்ப்பாணம் மூன்று தமிழ் தினசரிகளைக்காணும் அனுபவம்பெற்றிருக்கிறது.

கருத்தை பல கோணங்களில் பரீட்சிக்கவும், செய்தியின் தூய்மைக்கு ஒரு ஆரோக்கிய போட்டியாகவும் பத்திரிகைகள் அதிகரித்து வருவதை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை இன்றைய தினத்தில் எங்கள் பத்திரிகையின் நேர்மையையும் நிதானத்தையும் தங்கள் பெப்ரவரி 1ம் தேதி பிரசுரத்தில் பாராட்டியிருக்கும் ஆங்கில வார ஏடு ‘போர்வேட்’ ஆசிரியருக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

“தமிழில்இலங்குநூல்கள், பொதுமக்களுக்கு இலகுவாகக்கிடைக்கும் வகையில்அச்சிடுங்கள்” என்ற செய்தியுடன் அச்சகத்தை ஆசீர்வதித்த இலக்கண சுவாமி என்று அழைக்கப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமி தம்பிரானை இன்று நினைவு கூரவேண்டும்.

முதற்பிரதியைப்பார்த்து ‘ஏசுவார்கள் எரிப்பார்கள், உண்மையை எழுதுங்கள் உண்மையாய் எழுதுங்கள்’ என்று எம்மை ஊக்குவித்த சிவஞானச்செல்வர் சிவயோக சுவாமிகள் திருவாய்மலர்ந்த தீர்க்கதரிசனத்தை நாம் என்றும் மறப்பதற்கில்லை.

காலங்கள் மாறும் உணர்வுகள் மாறும், கடமைகள் மாறும், உரிமைகள் மாறும், தேவைகள் மாறும். ஆனால் இவ்வித மாற்றங்கள் மத்தியில் என்றும் மாறாத சத்தியம் உண்டு. அதுவே தெய்வம். இக்குறிக்கோளை என்றும் மறவாத சேவையை தொடர்வோமென்ற திட சங்கற்பத்தை இச்சுபதினத்தில் புதுப்பித்துக்கொள்கின்றோம்.

## செவன நிதியில் மூவருக்கு உதவி

(வவனியா)

செவன நிதியின் வட்டியில் 15 ஆயிரம் ரூபா வவனியாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணம் வீடு இல்லாத மிகவும் ஏழையானவர்களுக்கு வீடுகட்ட தலா ஐயாயிரம் ரூபா வீதம் நன்கொடையாக வழங்கப்படும்.

# பின்தங்கிய கிராமங்களில் அபிவிருத்தித் திட்டங்கள்

[சாவகச்சேரி]

சாவகச்சேரித் தொகுதியில் மிகவும் பின்தங்கிய கிராமங்களாகவுள்ள நவபுரம், குமாரத்திபிட்டி, கோயிலாக் கண்டி போன்ற கிராமங்களில் சில அத்தியாவசிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க சாவகச்சேரித் தொகுதியின் முன்னாள் எம்.பி திரு வி. என் நவரத்தினம் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

தற்போது லண்டனில் தங்கியுள்ள திரு,நவரத்தினம் இக் கிராமங்களின் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக அங்குள்ள அபிவிருத்தி நிறுவனங்களுடன் தொடர்புகள் மேற்கொண்டுள்ளார்.

# நாவலர் பணியை உலகம் அறியச் செய்த பெரியார்

## நீதியரசர் சிவசுப்பிரமணியத்துக்கு நினைவஞ்சலி

[வண்ணார்பண்ணை]

“நாவலர் பெருமானின் நற்பணிகளை உலகம் முழுவதும் அறியவைத்தபெருமை காலஞ்சென்ற நீதியரசர் திரு வீ.சிவசுப்பிரமணியம் அவர்களையே சாரும். இதன்மூலம் அவர் பெரும் சமயப்பணியை மேற்கொண்டவராகின்றார். தமிழும் சைவமும் இரண்டறக் கலந்ததென்ற உண்மை நாவலர் பெருமானின் வாக்கியங்களிலிருந்து உருவாகுகின்றது. நாவலர்சபையை உருவாக்கி அதை உலக மட்டத்தில் எடுத்துச்சென்ற திரு. சிவசுப்பிரமணியம் அவர்களை தமிழ் உலகமும் சைவ உலகமும் என்றும் மறக்கமுடியாது இவரின் இதயசுத்தியான இப் பணியே அவரது புகழுடம்மை அழியாமல் செய்துள்ளது”

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஞாயிற்றுக்கிழமை மாலைநடைபெற்ற நாவலர்சபையின் முன்னாள் தலைவர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் நினைவு தின வைபவத்தில் நினைவு மலரைப் பெற்று ஆசியுரை வழங்குகையில் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு. எஸ். வித்தியானந்தன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் புலவர் சிவபாதசுந்தரனார் பேசுகையில்; “இயற்கையானசைவ மக அமைப்பு அமரர் சிவசுப்பிரமணியத்தின் கருவிலேயே அமைந்தது என்று கூறலாம், இப்படி இயற்கையான கலாசாரப் பண்பு நிறைந்த ஒரு தமிழ்த்தலைமகன் அவர் என்பதை நாம் உணரமுடிகிறது” என்றார்.

பேராசிரியர் திரு. கு நேசையா பேசுகையில்; “பிரித்தானியர் ஆட்சியிலிருந்து உரிமை தெளிவில்லாத நிலையில் இருந்த மக்களுக்கு அதன் உண்மை புலப்படும் வகையில் சகலருக்கும் உரிமை எங்கும் உண்டென்பதை சட்டரீதியாக தெளிவுபடுத்தியவர் அமரர் சிவசுப்பிரமணியம்.

“கருணை உள்ளம்கொண்ட இவர் விழிப்புலனற்றோர் செவிப்புலனற்றோர் கல்வி வளர்ச்சிக்கு லட்சக் கணக்கான நிதியைத் தேடித்தந்தவர்” என்றார்.

சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் “நல்ல குணதியங்கள் அறிவால் மட்டுமல்ல, பிறப்பாலும் உருவாகின்றன. அமரர் இரண்டு வழிகளிலும் அறிவாலும், பண்பாலும், சிறப்புப்பெற்றவர். இதஅவருக்கு ஆசாரமுறைகளைப்பேணிப் பாதுகாக்கும் ஆற்றலும், சமயப்பணியில் ஆர்வமும் இயற்கையாக அமைந்தது. நீதியில் நடுநிலை தவறாத பண்பும் அவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தன” என்றார்.

‘ஈழநாடு’ பிரதம ஆசிரியர் திரு, ந. சபாரத்தினம் பேசுகையில்; “கஷ்டங்களிலும், துன்பங்களிலும்இனிமை இழக்காதவர் எப்போதும் ஒரே நிலையில் இன்முகத்துடன் வாழ்ந்தவர் பெரியார் சிவசுப்பிரமணியம். எப்போதும் எளிமையாகவும், சாதாரணமாகவும் இருப்பது எல்லோராலும் முடியாதது அமரர் வாழ்வில் எப்போதும் அமைதி குலைந்ததில்லை. நீதியும், கருணையும் அந்தந்த இடத்தில் இவரிடம் நிறைந்து நிற்பதைக் காணமுடியும். இவரது சேவையில் பல பலன்களை நாம் காணமுடிகிறது. அதேபோல அவரின் நீதியிலும் திடமான போக்கைக் காணமுடிந்தது” என்றார்.

ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் பேசுகையில்; “சிரிப்பினால் உலகை வென்று பல சாதனைகளைத் தேடிய அமரர் இன்று தேவர்களுக்கும் நீதி சொல்வதில் முதன்மை தாங்குவார் என நாம் நம்பமுடிகிறது” என்றார்.

பனை அபிவிருத்திச் சபையின் சார்பில் உரையாற்றிய இச் சபையின் தலைவர் க. நடராசா பேசுகையில் “பெருந்தோட்டத் துறை அமைச்சுதெங்கு,றப்பர் போன்று பனை அபிவிருத்திக்கும் ஒரு சபையை உருவாக்க இருந்தபோது இதுதொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கும் குழுவின் தலைவராக அமரர் சிவசுப்பிரமணியத்தை நியமித்தது. அவர் தென்னிந்தியா வரை சென்று ஆராய்ந்து அரசுக்குக் கொடுத்த அறிக்கையே இன்று பனை அபிவிருத்திக்கு ஒரு சபை உருவாக காரணமாக அமைந்தது” என்றார்.

பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் பேசுகையில்; “நாவலர் சபையை நினைக்கும்போது அமரர் சிவசுப்பிரமணியத்தை நினைவு கூராமல் இருக்கமுடியாது. தமிழர் கலாசாரம் சூறையாடப்பட்டபோது நாவலர் எழுந்திருக்காவிடில் இன்று சைவமும் தமிழும் இருந்திருக்கமுடியாது. அந்த நாவலரின் பெருமை என்றும் தமிழரையும் சைவத்தையும்வளர்க்க ஏதுவாக அமையும். இதற்கு அமரர் ஆற்றிய பணியை தமிழ் உலகம் மறக்கமுடியாது” என்றார்.

## ஈழநாடே நீடு வாழ்க!

நல்லதைத் தெளிந்து சொல்லும்
எம்மீழ நாடே வாழ்க!
வெல்லரும் முறையில் சொல்லும்
எம்தமிழ் ஏடே வாழ்க!]
சொல்வதைத் துணிந்து சொல்லும்
செந்தமிழ் ஏடே வாழ்க!
சொல்வதை விரைந்து சொல்லும்
எம்மீழ நாடே வாழ்க!!

உண்மையாய் எழுதும் ஏடே
பீடுற நீடு வாழ்க!
உண்மையை எழுதும் ஏடே
கேடற நீடு வாழ்க!!
உண்மைக்காய் எழுதும் ஏடே
உன்பணி நீடு வாழ்க!
உண்மையைப் போல என்றும்
வாழ்க எம் ஈழநாடே!!

— “முருகு”

## சிலையெடுக்கத் தக்கவோர் செம்மல்!

மலையகத்தி லுள்ளதமிழ் மக்களொன்றாய்க் கூடிச் சிலையெடுக்கத் தக்கதோர் செம்மல் — நிலைநின்று பங்கமறப் பல்பணிகள் பண்ணிய கே ராஜ லிங்கம் நினைவுதினம் இன்று!

மலையகத்தில் மிடுக்குடைய மலைபோல்நிற்கும்
மாண்புநிறை மதிவல்லான் தொண்டமானின்
வலியவலக் கரம்போன்றே அன்றிருந்து
மலையகத்துத் தமிழர்கட்குப் பணிகள் செய்த
மலையகத்துக் காந்தியென ஞாலம்போற்றும்
மாபுகழோன் கே—ராஜ லிங்கத்துக்கு
மலையகத்தோர் மலையகத்திற் சிலையெடுத்தல்
மனமார அவர்க்குச்செய் கைமாறுமே!

— முருகசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கியால் சுடப்பட்டு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இவர்தான் காரைச்செலுத்திச்சென்றவர்.

இம்மூருவமே துப்ப க்கிச் சூட்டுக்கிலக்காகி தீமூட்டி எரிக்கப்பட்டவர்களாவர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

''கடந்த 9ம் திகதி ஆர். வி. ஜி. ஸ்தாபனத்துக்குப் பொருட்கள் ஏற்றும் லொறி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கித்திரும்பிக் கொண்டிருந்தது. சிலாபத்தை லொறி அண்மித்ததும் லொறி குடைசாய்ந்ததால் அதன் மேல்பாகம் சேதமடைந்தது. இதனைப் பார்வையிடுவதற்காக லொறி உரிமையாளரும், மேற்படி ஸ்தாபனத்தின் கணக்கம்பிள்ளையும் மற்றவரும் நேற்று அதிகாலை 4 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டனர்.

''யாழ்ப்பாணம்-கொழும்பு வீதியில் வவனியாவுக்கு அண்மையில் கொக்குவெளியில் அதிகாலை 4 மணி தொடக்கம் கறுப்புச்சட்டை அணிந்தவர்கள் சோதனை நடத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

''காலை 9-15 மணியளவில் அப்பகுதியில் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் சோதனையிடப்பட்டன, அச்சமயம் திடீரெனச் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகள் சோதனை நடத்தியவர்களால் கார் ஒன்றை நோக்கித் தீர்க்கப்பட்டன.

''அக்காரின் பின்னுல் பிரயாணிகளுடன் நின்ற வான் ஒன்று சோதனையிடப்பட்ட பின்னர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான காரை விலகிச் செல்லுமாறு வான் சாரதி பணிக்கப்பட்டாராம்.

''சற்று நேரத்திற்குப் பின்னர் கொக்குவெளிப் பகுதியில் உள்ள சிலவீடுகளுக்குச் சென்ற கறுப்புச்சட்டை அணிந்தவர்கள் மண்ணெண்ணெயும், விறகுக் கட்டைகளையும் எடுத்துவந்து காருக்குள் போட்டுத் தீமூட்டியதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது''

இச்சம்பவம் குறித்து வவனியா மாவட்ட பிரஜைகள் குழுச் செயலாளர் டாக்டர் பரராஜசிங்கமும், வவனிய அரசாங்க அதிபர் திரு. கே. சிலோகேஸ்வரனும், வவனியா பொலிஸ் அதிபர் திரு சேப்பன்ஜி, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு விக்கிரமசூரியா ஆகியோருடன் தொடர்புகொண்டு ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

முற்ருக எரிக்கப்பட்டிருந்த காருக்குள் பின் ஆசனப் பக்கமாக இரு மனித முண்டங்கள் எரிந்த நிலையில் இனங்காண முடியாமலிருப்பதாகவும், சாரதியின் இருக்கையில் எரிந்த சாம்பல் குவியலாக இருப்பதாகவும் பிரஜைகள் குழுச் செயலாளர் தெரிவிக்கிருர்.

இச்சம்பவம் குறித்த பூரண விசாரணை ஒன்றை வவனியா பொலிஸ் அதிபர் மேற்கொண்டுள்ளதாகப் பிரஜைகள் குழுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முழுநாளும் வவனியாவில் பெரும் பதறறம் நிலவியது. கடைகள் நண்பகலுடன் மூடப்பட்டன.


**எம்பயர் திரையில்**

10-30, 2-30, 6-30,

ஜெய்சங்கர்-மாதவி

**ஆண்டவன்சொத்து**

**லிடோ சினிமா**

10-30, 2-30, 4-45 6-30

James Bond 007

in

**Octor Pussy**

(Cinemascope Colour)

[Sexy Action and Thrills]

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30

முத்துராமன், ஜெயசித்திரா ஸ்ரீகாந், வி.கே.இராமசாமி நடித்த

**இன்ஸ்பெக்டர்மனைவி**

(புதிய பிரதி)

14-2-86 முதல்

THE BRIDGE TWO FAR


## கணேஷின்--

[1ம் பக்கத் தொடச்ச்சி]

திரு எம். அந்தோனி முத்து மட்டக்களப்பு ஆயர் இல்லத்தைச்சேர்ந்த வண. பிதா சந்திரா பெர்னுண்டோ ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினுர்கள்.

பெருந்தொகையான மக்சள் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டனர். (ய


**நியூவிக்ரேஸ்**

**இன்றைய புதிய வெளியீடு**

ராஜேந்தரின்

★ மைதிலி என்னை காதலி

**நியூவிக்ரேஸ்**

எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

தொலைபேசி: 23532 • A 230



**விவாக சுபமுகூர்த்த அழைப்பிதழ்**

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் தைமாதம் 30ம் திகதி [12-02-86) புதன்கிழமை பகல் 12 மணியளவில்வரும் சுபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| சிரஞ்சீவி **நகுலேஸ்வரக் குருக்கள்** அவர்களுக்கும் | சௌபாக்கியவதி **யாழரசி** அவர்களுக்கும் |

பாலாவோடை காரைநகரில், பாணிக்கிரகண மாங்கல்ய தாரணம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| செல்லப்பா குருக்கள் தம்பதிகள், மாதகல் கிழக்கு, மாதகல். | இரகுநாதசர்மா தம்பதிகள், பாலாவோடை. காரைநகர். |

(C 701)


# மன்னரில தேடுதல் வேட்டை

(மன்னர்)

மன்னர் நகரில் இராணுவம் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) காலை முதல் மாலை வரை தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

முகமூடி மர்ம மனிதர் ஒருவர் சகிதம் இந்தத் தேடுதல் வேட்டை இடம்பெற்றது இந்தச் சம்பவததின்போது பலர் கைது செய்யப்பட்டனர்.

[ய]

## பலாலி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ணுவமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களில் பலர் கொல்லப்பட்டிருப்பதாக தமக்குக் கிடைத்த தகவல்களின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் தாய்மார் நேற்று யாழ் அரசாங்க அதிபரிடம் சென்று முறையிட்டனர்.

இதனைத்தொடர்ந்து இராணுவ அதிகாரிகளுடன் அரசாங்க அதிபர் தொடர்பு கொண்டதன் பேரில் இன்று அவ்விளைஞர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம்.

பலாலி முகாமில் 23 பேரும் யாழ் கோட்டையில் மூன்று பேரும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் பிரதி சனி கிழமை தோறும் தாய்மார் அவர்களைப்பார்வையிட்டு வருவதாயும் தெரிவிக்கட பட்டுள்ளது. (மா)

## கடத்தப்பட்ட .,

[ -ம் பக்கத் தொடர்ச்சி]

திரிகைகள் ஆகியவற்றுக்கும் மேற்படி மகாஜன சங்கம நன்றி தெரிவித்துள்ளது.

கடந்த 3ம் திகதி நண்பகல் யாழ். நகரில் முதலுதவி யிற்சி நெறியில் பங்குபற்றி விட்டு, வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவிகளுள் ஒருவர் இனந்தெரியாத நான்கு நபர்களால் கடத்திச் செல்லப்பட்டதும், இதுசம்பந்தமாக ஹர்த்தால். மறியல் போராட்டம் நடாத்த தீர்மானித்திருந்ததும் தெரிந்ததே. (மா)

## வேலைநிறுத்தம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழுவும், மக்கள் சபையும் இணைந்து இதுபற்றி ஆராய்ந்தது

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பணிமனையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அடையாள வேலை நிறுத்தம், கண்டனக் கூட்டங்கள் ஆகியவற்றை கிழக்குப் பகுதிக்கும், மலைநாட்டுக்கும் விஸ்தரிக்க வேண்டுமெனவுல் கூட்டத்தில் கோரப்பட்டது.

இதுபற்றி இன்று முடிவெடுக்கப்பட்டு அதற்கான திகதியும் இன்று தீர்மானிக்கப்படும்.

## மகாபொல---

[1ம் பக்கத் தொடர்ச்சி[

களில் மாணவர் அவைக்கு பெயர்கள் கொடுத்த மாணவர்கள் தாங்கள் திரும்பி வருவதற்கான ரயில் பிரயாண டிக்கட்டையும் யாழ் புகையிரத நிலையத்திலேயே பெற்றுக் கொள்ளுமாறும், இவ் டிக்கட்டுக்களை மாணவர்கள் தனித் தனியே எடுக்காமல் 5 மாணவர்கள் கூடி ஒரு டிக்கட் என்ற ரீதியில் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் டிக்கட் எதிர்வரும் சனிக்கிழமை யாழ். தேவி ரயிலில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் பயணம் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் மாணவர்கள் தங்களை மாணவர்கள் எனத் தெரியப்படுத்துமிடத்து முதல் உரிமை கொடுக்கப்படும். பிரயாணம் மற்றும் தங்குமிட வசதிகள் சம்பந்தமான சகல விபரங்களும் கூட்டத்தில் வைத்து மாணவர்களுக்கு நேரடியாக தெரிவிக்கப்படும்'' என்றும் தெரிவித்துள்ளது. (மா)

# இப்படியும் நடக்கிறது

'அவசரம்' என்று குறிப்பிட்டு, ஒரு கடிதம் நேற்றுக் காலை கிடைத்தது. அதில்—

''ஈழநாடு'' பத்திரிகைக்கு இம்மாதம் பதினொராம் திகதியுடன் (அதாவது இன்றுடன்) இருபத்து எட்டு வயது பிறக்கிறது என்பதை நினைத்துப்பார்க்கும்போது எங்களை அறியாமலே பெரும் பூரிப்பு ஏற்படுகிறது. தமிழ்ப் பகுதியிலும் தமிழ்த் தினசரி நடத்தலாம் என்ற 'விஷப் பரீட்சை'க்குள்ளாகி 'இமயமலை சாதனை' ஏற்படுத்தியது உங்கள் பத்திரிகை.

''அன்றுமுதல் இன்றுவரை நேர்மை, நிதானம், பொறுமை சலசலப்பற்ற-தெளிந்த நீரோட்டம் போன்று செய்திகளை மிகவும் கண்ணியத்துடன் வழங்கி, தமிழரின் கலை, கலாசாரத்தைக் காத்துவரும் 'ஈழநாடு'வுக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதே நேரத்தில்; முப்பது (வருடகால) வயதைக்கொண்ட இலங்கையின் ஒரு முன்னணி ஏடான 'FORWARD' எனும் ஆங்கில வார இதழில் (1-2-1986' 'ஈழநாடு' பத்திரிகையில் இடம்பெற்ற முன் பக்கத் தலைப்புச் செய்தி தொடர்பாக வெளிவந்திருக்கும் 'கணிப்பை' அப்படியே ஆங்கிலத்தில் கீழே தந்து, எமது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றோம். அந்த வாசகம் இதுதான்:

The translation of the said report that appeared in ''the Eelanadu'' is as far as possible accurately given.

The authencity of the report can hardly be challenged since it appeared in the most prestigious Tamil daily published in Jaffna.''

இவ்வாறு வாழ்த்துத் தெரிவிக்கிருர் அந்த யாழ். வாசகர்.

எழுத்தாலும், உள்ளத்தாலும் நேசிக்கும் உங்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

- ஊடுருவி

# மரண விசாரணை ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். வி. வில்வராஜா மற்படி விசாரணையை நடத்தினுர். இறந்தவரின் சகோதரரான ஜோக்கிம் வதனசேகர் (வயது 30) சாட்சியமளிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

''வவனியா கமநலசேவை இலாகாவில் சிரேஷ்டதொழில்நுட்ப அதிகாரியாக கடமை பாற்றும இறந்த எனது சகோதரர் பம்பைமடுவுக்கு கடமை நிமித்தம் வந்தபோது எங்கள் அண்ணைக்கும வந்தார். தேநீர் கொடுத்தோம். அப்போது வெடிச்சத்தம்கேட்டது. பயத்தினுல் நானும், மனைவியும். அண்ணனும் எங்கள் வீட்டிற்குள்ளே இருந்தோம். பலவாகனங்களில் ஆயுதம் சகிதம் சீருடையில் வந்தவர்கள் எங்களை வெளியே வரும்படி கூப்பிட்டார்கள். கையை உயர்த்திக்கொண்டு போனேம். அப்போது அங்கிருந்த ஒருவர் ''எங்கள் தலைவனிடம் போங்கள்'' என்று கூறினுர். அப்படிப் போகும்போது 'ஓடுங்கடா, என்று சத்தம் கேட்டது. கையைத் தூக்கியபடி ஓடினேம். வெடிச்சத்தம் கேட்டது எனது காதுக்கு பக்கத்திலுலே சன்னம்போனது. இறந்தவனைப்போல் விழுந்தேன். பின்னரும் வெடிச்சத்தம் கேட்டது, ஓடிய அண்ணர் சூடுபட்டு விழுந்தார்.

''அந்தச் சீருடையில் நின்றவர்கள் இறந்தஅண்ணருடைய கையிலிருந்த மோதிரத்தையும், மணிக்கூட்டையும் கழற்றி எடுத்தார்கள்

''எனது வீட்டைச்சோதனை செய்வதற்காக மனைவியை அழைத்துச்சென்ற அந்த சீருடையினர், எட்டுப்பவுண் தாலிக்கொடியையும்.300ரூபா பணத்தையுய் எடுத்துச்சென்றுளார்கள்.

''சீருடையினர் சென்றபின்னர் இறந்த அண்ணருடைச் சடலத்தை வீட்டுக்குஎடுத்துச் சென்று, பின்னர் உறவினர்களுக்கு அறிவித்தேன்''

பிரேதபரிசோதனையை வவனியா மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் வி சிறீரங்கஜேஸ்வரன் மேற்கொண்டிருந்தார். அவர் தமது அறிக்கையில்; துப்பாக்கிச்சூட்டினுல் ஏற்பட்ட இரத்தப்பெருக்கும அதிர்ச்சியுமே மரணத்திற்கு காரணமாகும்'' என்று தெரிவித்துள்ளார்

விசாரணையின்போது இறந்தவரின் மனைவியும் சாட்சியமளித்தார்

## தமிழர்கட்கு,..

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பதுகண்டிக்கத்தக்கது புறூணை மன்னரிடம் தமிழ்மக்கள மீது அபாண்டமாக குற்றம் சுமத்தும் பிரதி அமைச்சரின் இச் செயல் தமிழர்கட்கு களங்கம் ஏற்படுத்தும் செயல்.'

என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னுள் வட்டுக் கோட்டைப் பிரதிநிதி கலாநிதி நீலன் திருச்செல்வம் கண்டித்துள்ளார். இதுகுறித்து உண்மை நிலைகளை எல்லாம் விளக்கி புரூணை மன்னருக்கு கடிதம் ஒன்றை அவர் எழுதவுள்ளார்.

இந் நாட்டின் பிரதி அமைச்சர் இப்படி தமிழர்களின் பொருளாதாரத்துக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் புரூணை மன்னருக்கு கூறியது சரியற்ற செயல், கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. பிரதி அமைச்சரின் தவருன பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் தமது கடிதம் அமையும் என்றும் நீலன் கூறினுர்.

சிஙகப்பூரின் தூதுவராக இந்தியா.இலங்கைக்கு கடமை புரியும் திரு பற்றிக் சாங்கையும் தான் சந்தித்து பேசியதாகவும், இவ்விடயம்பற்றியும் சிங்கப்பூரில் தொழில் புரியும் தமிழர்கள் பற்றியும் கலந்துரையாடியதாகவும் நீலன் கூறினுர்.

## நினைவு தினம்

(பண்டத்தரிப்பு)

இளவலை ரோமன் கத்தோலிக்க கனிஷ்ட்ட வித்தியாலயத்தில் சரண ஸ்தாபகர் பேடன் பவல் அவர்களின் நினைவு தின விழா எதிர்வரும் 20-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது இவ் விழாவில் பிரதம அதிதியாக சென் யோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிராந்திய ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி கலந்துகொள்வார் காங்கேதன் துறை மாவட்ட சாரணர் சங்கம் நடத்திய சாரணர்

[8ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பரு. திடீர் தாக்குதல்களினால்

# தனியார் ஆஸ்பத்திரி சேதம் வைத்தியர் உயிர் தப்பினர்

(புலோலி)

பருத்தித்துறையில் நடாத்தப்பட்ட திடீர் மோட்டார் ஷெல் தாக்குதல், பீரங்கித் தாக்குல், ஹெலிகொப்டர் தாக்குதல்களினால் பருத்தித்துறை முருகானந்தம் தனியார் வைத்தியசாலைக்கு 75 000 ரூபா சேதமேற்பட்டிருப்பதாகவும், அங்கு வைத்தியசேவையில் ஈடுபட்டிருந்த உதவி டாக்டர் ஒருவர் காயப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பினர் என்றும், பெருந்தொகையான நோயாளிகள் பலத்த அவஸ்தைக்குள்ளாகினர் என்றும் இலங்கைதனியார் மருத்துவச்சங்கத்தலைவருக்குப்புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக முன்னாள் பருத்தித்துறை லயன்ஸ் சழகத் தலைவர் டாக்டர் எம். கே முருகானந்தனால் இலங்கை தனியார் மருத்துவ சங்கத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

கடந்த வாரம் புதன்கிழமை நண்பகல் நடைபெற்ற திடீர் மோட்டார் ஷெல் தாக்குதல், பீரங்கித் தாக்குதல், ஹெலிகொப்டர் தாக்குதல்களினால் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வந்திருந்த பொந்தொகையான நோயாளிகள் அல்லோலகல்லோலப்பட்டதுடன் பெரும் பாதிப்புமடைந்துள்ளனர்.

இங்கு கடமையிலிருந்த உதவி டாக்டர் ஒருவர் காயமடைந்து மயிரிழையில் உயிர் தப்பினர். வைத்திய நிலையக் சட்டிடம் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது. உள்ளேயிருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் சேதமடைந்துள்ளன. கார் கராஜ்ஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வைத்திய சேவைக் கார் பலத்த சேதத்துள்ளாகியுள்ளது. சாரில் மாத்திரம் 25 துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த காயங்கள் காணப்படுகின்றன. கண்ணாடிகள் யாவும் நொறுங்கியுள்ளன. இவ்வாறான பயங்கரங்கள் நடைபெற்றபோதும் இங்கு வைத்திய சிகிச்சைகளைப் பெற வந்திருந்த நோயாளிகள் எவரும் எதுவித காயங்களுக்குமுள்ளாகாமல் தப்பித்துக்கொண்டது தெய்வாதீனமாகும்,

அல்லற்படும் நோயாளிகளுக்கு வைத்தியசேவைகளை வழங்கும் இதுபோன்ற வைத்தியசாலைகள் மேலும் தாக்கப்படாமலிருக்க ஆவன செய்ய வேண்டும்.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ். மருத்துவச்சங்கம், வடஇலங்கை பொது வைத்திய சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# மக்கள் அவைபற்றி விளக்கம்

[யாழ்ப்பாணம்]

''இன்றுள்ள சூழ்நிலையில் மாணவர்கள் முதலுதவி பயிற்சி பெறுவது அவசியமாமாகும் யாழ்ப்பாணத்தில் 119 மாணவிகளுக்கு கிழமைக்கு 5 பேர் வீதம், தனியார் மருத்துவ மனையொன்றில் முதலுதவி சிகிச்சை பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இதில் பயிற்சிபெற்ற மாணவி ஒருவர் கடத்தப்பட்டதினால் இந்தப் பயிற்சிக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது''

யாழ்.வேம்படி மகளிர்கல்லூரியில் நடந்த மக்கள் அவை கருத்தரங்கில் பேசிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. என். மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினர். திரு. ரி. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது: மாணவி கடத்தலினால், நம் சமூகத்திற்கு பெரும் நன்மையளிக்க கூடிய ஒரு முதலுதவி பயிற்சி பாதிப்படைந்துள்ளது மாணவிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது முதலில் பாதுகாப்பு குறிப்பாக பெண்களுக்கு பாதுகாப்பு தேவை இதற்கு இந்த மக்கள் அவை ஏற்பாடு செய்யவேண்டும்.

### இயக்கங்களின் உதவி

இன்று பொலிஸ் நிர்வாகம் இல்லை அதனால் மக்கள் புனிதமான இயக்கங்களின் உதவியை நாடிச்செல்கின்றார்கள். அதற்கு இயக்கங்கள் தான் மக்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும் மக்கள் எல்லாவற்றுக்கும் இயக்கங்களை நம்பித்தான் இருக்கிறார்கள்.

### ட்ராக்டர்களுக்கு பதில் வண்டில்

யாழ். நகர் எங்கும் வீதிகள் ஒரே குப்பை மேடுகளாக இருக்கிறது இதனால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. குப்பைகளை ஏற்றும் ட்ராக்டர்கள் நடத்தப்படுவதாக ஆணையாளர் கூறுகிறார். அப்படியானால் ட்ராக்டர் வாங்கும் பணத்திற்கு 10 மாட்டு வண்டில்களை வாங்கி விட்டால், குப்பைகளை அகற்றுவதுடன் 10 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கமுடியும்.

### பெற்றோல் விற்பனை

சந்திக்குச் சந்தி, வீதிக்கு வீதி பெற்றோல் விற்பனை நடக்கிறது. இதற்கு ஒரு கட்டுப்பாடுதேவை. மக்கள் அவை இதில் கவனம் செலுத்த வேண்டும்.

யாழ்.நகரில் பொருட்கள் வாங்குவதற்காக கிராமங்களிலிருந்து பலர் வருகிறார்கள். இந்தப் பொருட்களை அந்தக் கிராமங்களில் பெற மக்கள் அவை ஏற்பாடு செய்ய வேண்டும் இதனால் அவர்கள் யாழ். நகர் வந்து போகும் செலவு மிச்சமாகும்.

### தேவைகளை பூர்த்திசெய்ய

திரு. செந்தூர்ராசா பேசுகையில் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாமல் தாங்களே தாமாக இயக்கத் தொடங்கி தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று கூறினர்.

''மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஒரு பொது அமைப்புத் தான் மக்களவை என்றும் ஒவ்வொரு கிராமத்திலும் அந்தந்த பகுதி மக்கள் அரசியல் வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட நிலையில் நின்று செயற்பட்டு தங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் உறுதி கூறினர்.

திரு ரி. மாணிக்கவாசகர் பேசுகையில் ஒருபுறம் போராட்டம் நடந்துகொண்டிருக்க மறுபுறத்தில் எங்கள் பொருளாதாரத்தில் அக்கறை செலுத்தவேண்டும் என்றும் கூறினர.

திம்பு மாநாட்டில் இயக்கங்களுக்கு உயர்மதிப்டளித்து, இந்தியாவும் இலங்கையும் ஏற்றுள்ளதால், இயக்கங்களைக் குறை சொல்வதைத் தவிர்க்கவேண்டும் என்றும் இயக்கங்களின் பெயரைச் சொல்லி தவறான வழிகளில் செல்டவர்களை சண்டிக்க வேண்டியது அவசியமென்றும் அவர்தெரிவித்தார்.

திரு இரகுநாதன் பேசுகையில் மாணவர்களுக்கு கல்வி தான் முக்கியமென்றும் கிராமங்களில் இலவச வகுப்புக்களை நடாத்தவேண்டுமென்றும் கூறினர்.

கல்வியில் தரப்படுத்தல் ஏற்பட்டதன் எதிரொலியாகத்தான் மாணவர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டு இன்றுள்ள பிரச்னை தோன்றியதாகவும் அவர் தெரிவித்தார்

திரு எஸ் சண்முகராசா பேசுகையில் உள்ளூர் உற்பத்திப்பொருட்களுக்கு ஊக்கமளிக்கவேண்டுமென்றும் பொருளாதாரத்தை வளாக்கவேண்டுமென்றும் கூறுனர்.

மக்களுக்கு உணவும் பாதுகாப்பும் முக்கியமென்றும் இவற்றுக்கான ஏற்பாட்டை இந்த மக்கள் அவை செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினர். (க)

# இன்றைய பலன்!

மாதம்-தை
திகதி- 29 (1986-2-11)
கிழமை- செவ்வாய்
திதி- திருதியை முழுநாளும்
நட்சத்திரம்- பூரட்டாதி பின் இரவுவரை

மேடம்: சீறிவரும் கோபம் உங்களை நிலை தடுமாறவைக்கும். வேண்டியவர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். நஷ்டத்திற்கும் இடமுண்டு.

இடபம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும் உங்களைப்புற்றிய புளந்துரைகளைப் பரப்புவார்கள். இனறு அதிக யேச்சைத் தவிர்க்கவும்.

மிதுனம்; பொருள் வரவிற்கும் இடமுண்டு. சுற்றாடலில் மதிப்புயரும். பெரியவர்களின் ஆலோசனை களும் கிடைக்கும்.

கடகம்: குடும்பத்தில் சுகக் குறைவுகளும் தென்படும். அதிக அலைச்சலின்மூலம் கவலை உருவாகும். முன்னேற்றத்திற்கும் தடையேற்படும்

சிங்கம்; இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். வாசனச் சொந்தக்காரருக்கு அதிக வருமானம் கிடைக்கும் புத்திரவழியாலும் சிறப்புண்டு

கன்னி: கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராய பேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மத்தியில் உறவு மேற்படும் முன்னேற்றத்திற்கிடமுண்டு.

துலாம்: நம்பிக்கைமோசடி நடக்கும். வியாபாரத்துறையில் நஷ்டமேற்படலாம். அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம், இலட்சியப் பாதையில் நடைபோடுவீர்கள். எடுத்த முயற்சியில் முன்னேற்றம் தென்படும். புண்ணிய சாரியங்களில் ஈடுபாடும். உண்டு.

தனுசு, கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும். அரசினர் ஆதரவும் உண்டு.

மகரம்: புதிய நண்பர்களைத் தேடிக்கொள்வீர்கள். பூமிப்பிணக்குநிவர்த்தியாகும். மக்கள் ஆதரவும் உண்டு.

கும்பம்: தானிய நஷ்டத்திற்கிடமுண்டு. உடல் நலம் பாதிக்கப்படும். தொழில் சம்பந்தமான கவலையும் அதிகரிக்கும்.

மீளம்: அற்பவிடயத்திற்குக்கூட ஆத்திரப்படநேரும். நெருங்கிய நண்பரொருவரை பகைத்துக்கொள்ள நேரும். இன்று நாவடக்கம் நன்று.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

# 4 இயக்குநர்கள் வேலைநீக்கம்!

[கொழும்பு]

தொழிற்துறை, விஞ்ஞானத்துறை விவகார அமைச்சர் திரு டென்ஸில்பெர்னாண்டோ தனது அமைச்சின் கீழுள்ள கூட்டுத்தாபனங்களைச் சார்ந்த நான்கு இயக்குநர்களை வேலை நீக்கம் செய்திருப்பதுடன் இயக்குநர்களைப் பதவியிறக்கியுள்ளார்

பதவியிறக்கப்பட்ட இயக்குநர்களுக்கு வாகன வசதிகளோ மாதாந்த 'அலவன்சு'களோ வழங்கப்பட மாட்டாது.

பொதுவாக அரசாங்க கூட்டுத்தாபன இயக்குநர் சபைகளுக்கு அரசியல் செல்வாக்குள்ளவர்களே நியமிக்கப்படுவது வழக்கமாயினும், அமைச்சர் இத்துணை பாரதூரமான நடவடிக்கையை எடுத்ததிலிருந்து சம்பந்தப்பட்ட கூட்டுதாபனங்களில் பாரதூரமான ஊழல்கள் நடைபெற்றிருக்கலாம் என நம்ப இடமிருக்கிறது.

## "உயிர்தப்பி ஓடுகையில் காலில் குண்டடிபட்டது"

[புலோலி]

''பயங்கர வெடிச்சத்தங்கள் கேட்டு சற்று ஓய்ந்தபின்னர் கடைக்குள் இருந்த நான் தப்பித்துக் கொள்வதற்காக வெளிக்கிட்டு வேலாயுதம் மகாவித்தியாலயப் பக்கமாக ஓடினேன். அப்போது எனது காலைத் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கின. நான் வைத்தியசாலைக்கு வந்துபார்த்தபோது எனது சேட்டுக்குள்ளிருந்த 2400 ரூபாபணத்தையும் காணவில்லை',

இவ்வாறு பருத்தித்துறையில் நடைபெற்ற மோட்டார் ஷெல் தாக்குதலினால் காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வரும் புலோலியைச் சேர்ந்த திரு கே. விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

''சம்பவ தினம் காலை பருத்தித்துறைக்குச் சென்ற நான் சுமார் 11.45 மணியளவில் பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள நகைக்கடையொன்றில் கதைத்துக்கொண்டிருந்தேன். அப்போது பயங்கர வெடிச் சத்தங்கள் கேட்டன. அப்போது கடையுரிமையாளர் என்னையும் கடைக்குள் விட்டு கடையைச் சாத்தினர். பின்னர் வெடிச்சத்தங்கள் ஓய்ந்ததும் எனது சைக்கிளைக் கடைக்குள்வைத்துவிட்டு வேலாயுதம் மகாவித்தியாலயப் பக்கத்திற்கு ஓடிக்கொண்டிருந்தேன். சிவன்கோவிலடியில் நான் ஓடிக்கொண்டிருந்தபோது எனது காலை துப்பாக்கிக்குண்டுகள் தாக்கின இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. பின்னர் அவ்விடத்திற்கு வந்த வான் ஒன்றில் நான் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டேன் மந்திகைக்கு வந்ததும் அங்கு பணியாற்றும் எனது மகனிடம் சேட்டைக் களற்றிக்கொடுத்து அதற்குள் 2400 ரூபா காசு இருப்பதாகவும் சொன்னேன். ஆனல்சேட்பைக்குள் பார்த்த எனது மகன் காசு இல்லையென்பதைத் தெரிவித்தார்.''

## சென். ஜோன் அம்புலன்ஸ் கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு

சென். ஜோன் அம்புலஸ்ஸ் படையின் புதிய செயல்திட்டத்தின் பிரகாரம் ''கைத்தொழில் பாதுகாப்பும் சுகாதாரமும்'' என்னும் விடயம் பற்றி இருநாள் சருத்தரங்கு ஒன்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் எதிர்வரும் மார்ச் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் உட்பட வடபகுதியிலுள்ள கைத்தொழில் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்வார்கள்

யாழ். தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவரும், தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு. எஸ். சிவமகாராசாவின் அனுசரணையுடன் நடைபெறும் இக்கருத்தரங்கை சிறப்பாக நடாத்துவதற்கான ஒழுங்குகளை படையின் வட பிராந்திய ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி மேற்கொண்டுள்ளார்.

## சுகாதாரக் குழு அங்குரார்ப்பணம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிரமத்தில்ஆரம்ப சுகாதார கவனிப்பு குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

மாதகல் சென். யோசப் மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றபோது குழுவின் தலைவராக மாதகல் பிரஜைகள் குழு தலைவரும், ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகருமான திரு. எஸ். மாட்டின் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. எல். ஏ. அமிர்தகுமாரும். பொருளாளராக திரு வி. தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். 14 பேரைக்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## 400 இலங்கையர் கைது!

(கொழும்பு)

போதைவஸ்த்துக்கடத்தலில் ஈடுபட்டசுமார் நாநூறு இலங்கையர்கள் ஐரோப்பிய நாடுகளில் கடந்த வருடத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் பிரான்ஸ் இத்தாலி ஸ்சபெயின் ஆகிய நாடுகளிலேயே கைதானர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது

ஒரு கிலோ ஹீரோயின் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றுவருட கோரிக்கை நிறைவேறியது

(பண்டத்தரிப்பு)

மாதகல் பகுதிக்கு மருத்துவ மாது ஒருவர் இம்மாதம் தொடக்கம் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாகவெற்றிடமாக இருந்து வந்த மருத்துவமாது பதவிக்கு ஒருவரை நியமிக்குமாறு மாதகல் பகுதியிலுள்ள பொதுநல ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்ததைஅடுத்து இம்மாதம் தொடக்கம் புதிய மருத்துவ மாது நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு மாதகல் ஆரம்ப சுகாதார கவனிப்புக் குழு விடுதியொன்றை மாதகலில் இலவசமாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அதன் தலைவர் திரு. எஸ். மார்ட்டின் தெரிவித்தார்.

## வறுமையில்....

[3ம் பக்கத் தொடர்ச்சி]

செயலாளராக ஐ. சிறிஞானனந்தனும், பொருளாளராக அ.முருகவேலும் மற்றும் 6 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

சி. கனகரத்தினம்
ஜே. பி. யூ. எம்.
உதவியாளர்: க. கேசவன்
ஜே. பி. யூ. எம்:
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசுக்களும்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 34 அ-பிரிவுகள் 524. 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
காலஞ்சென்ற துரைராஜசிங்கம் மகள் தயாநிதி உரும்பராய் தெற்கு, உரும்பராய். என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,
மரணமெய்தியவர்.
ஜோர்ஜ் டொனல்ட் துரைராசசிங்கம் கைம்பெண் பரிபூரணம்; உரும்பராய் தெற்கு, உரும்பராய்.
மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3636/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986ஆம்ஆண்டு பங்குனி மாதம் 14ஆந் நாளன்று முற்பகல்...மணிக்குஇந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**க. நாகேந்திரம்,**
(ஒப்பம்)
பதிவாளருக்காக.

என்னால் வரையப்பட்டது.
**க. கேசவன்,**
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி
(C 552)

# ‘மக்கள் போராட்டம்மூலமே நீதியை நிலைநாட்ட முடியும்’

## கையெழுத்து இயக்க ஆரம்ப நிகழ்ச்சியில் பேச்சு

[புலோலி]

‘இன்றைய எமது போராட்டம் மக்கள் போராட்டமாக நடைபெறும் போதுதான் தமிழினம் இலட்சியத்தை அடைந்து வெற்றி பெறமுடியும். மக்கள் போராட்டத்தின் மூலம் தான் நீதியை நிலைநிறுத்த முடியும்.’

இவ்வாறு துன்னாலை பிரஜைகள் குழுவின் 10 இலட்சம் கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய யாழ்.திறந்த பல்கலைக்கழக பேராசிரியர் ஏ. துரைராசா குறிப்பிட்டார். துன்னாலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ஆ.வ. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் துன்னாலை காசிநாத வித்தியாலயத்தில் நடைபெற்றது. பேராசிரியர், துரைராசா உரையில் மேலும் குறிப்பிட்டதாவது.

இன்றைய இளம் சந்ததியினர் தமிழினம் பாதுகாக்கப்பட்டு அவர்களின் இலட்சியம் வெற்றியடைய வேண்டுமென்பதற்காகப் போராடிவருகின்றனர்; தமிழினத்தின் உயிருக்கு உத்தரவாதமில்லை. உடமைகள் சூறையாடப்படுகின்றன. இளம்சந்ததியினருடன் மக்கள் அனைவரும் இணைந்துபோராட வேண்டும். இளைஞர்களால் மட்டும் இப்போராட்டத்தா வெற்றிபெற முடியாது. இப்போராட்டம் நிச்சயம் மக்கள் போராட்டமாக நடைபெற வேண்டும். மக்கள் போராட்டத்தின் மூலம்தான் நீதியை நிலைநாட்டமுடியும். எமது வெற்றிக்கு நாம் இந்தியாவை மட்டும் நம்பியிருக்கமுடியாது. இக்கையெழுத்து இயக்கம் மக்களை இப்போராட்டத்தில் ஈடுபட விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பது நம்பிக்கையாகும் என்று குறிப்பிட்டார்.

பிரஜைகள் குழுப்பொருளாளர். திரு. எஸ். செல்லையா பேசுகையில்

எமது பகுதி மக்களின் விமோசனம் கருதியே, துன்னாலை பிரஜைகள் குழுவும் சமாதான சபையும் செயற்பட்டு வருகின்றன. மக்களின் சேவைகளையே இலட்சியமாகக் கொண்டு செயற்படுவதனாலேயே எமது பிரஜைகள் குழுவும், சமாதானசபையும் பத்திரிகை விளம்பரங்களையோ ஏனைய விளம்பரங்களையோ எதிர்பார்க்காமல் செயற்பட்டுவருகின்றது. எமது பகுதி மக்களின் குறைபாடுகளை நீக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே எமது முக்கிய சேவையாகும் என்றார்.

சமாதானத் சபைத்தலைவர் திரு. எஸ். இராசையா மக்கள் அவை அமைப்பாளர், திரு. எஸ். செந்தூர் ராசா குடும்பநலத்திட்ட உத்தியோகத்தர், திரு. எஸ். பூவேந்திரன், திரு. அ. ஞானச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

## நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம் வலி மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். ஜெயக்குமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் அ, வ. துரையப்பா; உபதலைவர்கள்:- அ யேசுதாசன்; சூ. அல்போன்சஸ்; காரியதர்சி:- ச செல்வரத்தினம்; உபகாரியதரிசி:- நீ செபமாலை; தனாதிகாரி:- மு. க. பத்மநாதன் கணக்குபரிசோதகர்:-ஜீ. எம். யோசப் பல நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## எழுத்தாளர்கள்

(3-ம் பக்கத்தொடர்ச்சி]

றுக்கொண்டு தமது உரையில், ‘‘முஸ்லிம்கள் மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால் ஒன்றுபட்டவர்களே. இஸ்லாமிய கலாசாரங்களை வெளிக்கொணர்வது மிகவும் நல்லது’’ என்றார்.

சட்டத்தரணி இமாம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஏ. எம். அசீஸ் மௌலவி கிராத் ஓதினர் பாடசாலை மாணவர்களும் திருமுறைப் பாடல்களை ஓதினர்கள் இறுதியாக மருதாணி கலை, இலக்கிய வட்டத்தின் செயலாளர் ஐ ஏ பாயிஸ் அன்சார் நன்றி கூறினார்.

## இடமாற்றம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி மக்கள் வங்கியின் முகாமையாளராகச் சுமார் 2 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய திரு. என்.லோகநாதன் இம் மாதம் முதலாம் திகதி முதல் கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

## கணேஷ் மறைவு: அனுதாபச் செய்தி

[சாவகச்சேரி]

சென்னையில் திடீரெனக் காலமான பட்டிருப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களுள் ஒருவருமான திரு.பூ.கணேசலிங்கத்தின் இழப்பு தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்’’ என்று சாவகச்சேரி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பட்டிருப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் திரு, கணேசலிங்கத்தின் குடும்பத்தாருக்கும் அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

## பகிரங்கத் தீர்ப்பு

[புலோலி]

கரவெட்டியில் பனங்காணிப் பற்றைக்குள் மர்மமாக இறந்து கிடந்த 3 பிள்ளைகளின் தந்தையான மில் தொழிலாளியின் மரண விசாரணைகளை மேற் கொண்ட மரணவிசாரணை அதிகாரி பகிரங்கத் தீர்ப்பு வழங்கி இவரின் மரணம் சம்பந்தமாக மேலும் விசாரணைகளை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிராமசேவை அலுவலருக்கு உத்தரவிட்டார். இறந்தவரின் சில உடல் உறுப்புக்கள் இரசாயனப்பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப் பட்டுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த கந்தன் குலபாலசிங்கம் (வயது26) என்பவர் மர்மமான முறையில் பனங்காணிப் பற்றையொன்றுக்குள் மரணமாகிக் கிடக்கமீட்கப்பட்டார் இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை உடுப்பிட்டி சிடீர் மரணவிசாரணை அதிகாரி திரு வீ நடராஜா (ஜே.பி) மேற்கொண்டார் துன்னாலை தெற்கு கிராம சேவை அலுவலர் திரு எஸ் ஏ ஞானச்சந்திரன் சாட்சியமளித்தார்.

# அகதிகளுக்கு வழங்கும் பங்கீட்டில் பாரபட்சம்!

(சாவகச்சேரி)

‘‘1983ம் ஆண்டு ஜூலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு வந்துபுனர்வாழ்வுபெற்றுவாழ்கின்ற அகதிமக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இலவச பங்கீட்டுப் பொருட்கள் விடயத்தில்காட்டப்படுகின்ற பாரபட்சங்களைக் கண்டித்து இவற்றினை நீக்கி சகல அகதிமக்களுக்கும் ஒரே மாதிரியான பங்கீட்டுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்து உதவுங்கள்’’ என மறவன்புலவு அகதிகள் நல்வாழ்வுச்சங்கம் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர்திரு. எம். எஸ். செல்லச்சாமிக்கு அனுப்பி வைத்த மகஜரில் கேட்டுக்கொண்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனக்கலவரத்தினையடுத்து வடபகுதியில் புனர்வாழ்வுக் குட்படுத்தப்பட்டிருக்கும் கிளிநொச்சி, கெற்பேலி, மறவன்புலவு பகுதிகளில் வாழ்கின்ற அகதிமக்களுக்கு வெவ்வேறு விதமான உதவிகளை அரசு வழங்கி வருவதன் மூலம் இம்மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவது வேதனைக்குரிய நிகழ்வுகள் எனவும் ‘‘மறவன் புலவு திட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகள் முற்றுப்பெற்றுள்ளது என்ற தவறான எண்ணத்தினைக்கொண்டு இம்மக்களுக்கான அரசின் இலவச பங்கீட்டுப்பொருட்களை தைமாதத்துடன் நிறுத்திக்கொள்வதென முடிவுசெய்யப்பட்டமையை மீளப்பரிசீலனை செய்து புனர்வாழ்வு அமைச்சு மூலம் இதற்குரிய அனுமதியையும் அங்கீகாரத்தினையும் பெற்றுத்தர ஏற்பாடு செய்யுங்கள்’’ எனவும் அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

## ரூபவாஹினி

பெப்ரவரி 11 செவ்வாய் மாலை

- 5.00- செய்திகள்
- 5.05- விஞ்ஞானம் [தமிழ்]
- 5.30- ‘பிளக் பியூட்டி’
- 6.00- ‘எல்லாப் பயிற்சியும் வீணாகுமா?’’
- 6 15- நிகழ்வின் நிழல்
- 6 30- செய்திகள் [தமிழ்]
- 6.55- இளைஞர் நிகழ்ச்சி
- 7.25- ‘தட்ஸ்இன்கிறிடிள்’
- 8.00- செய்திகள் [சிங்களம்]
- 8.20- ‘தட்ஸ் இன்கிறிடிபிள் [தொடர்ச்சி]
- 8.45- கீழைத்தேய இசை நிகழ்ச்சி
- 9.00- செய்திகள் [ஆங்கிலம்]
- 9.20- தேசிய லொத்தர் சபை நிகழ்ச்சி
- 9.45- நடப்பு நிகழ்ச்சிகள்
- 10 00 ‘த சலிவன்ஸ்’
- 10.50 ஈரான் தேசிய தினத்தைமுன்னிட்டுவிஷேச நிகழ்ச்சிகள்
- 11.15- ஒளிபரப்பு முடிவு

## விபத்து மரணம்

[வவனியா]

வவனியா மகாஇறம்பைக் குளத்தில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இறந்த இளம் யுவதி முருகேசு ஜெயலட்சுமியின் (16 வயது) மரண விசாரணையை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். வி. வில்வராஜா மேற்படி மரணம் விபத்துமரணம் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

விசாரணையின்போது இறந்தவரின் தாய் முருகேசு லட்சுமி (60 வயது) முகமட் யுனைதீன் சரஸ்வதி, ஆகியோர் சாட்சியமளித்துள்ளார்கள்

பிரேதபரிசோதனையினை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி. சிறீராஜேஸ்வரன் மேற்கொண்டிருந்தார்

தலையில் சூட்டுக்காயம் காணப்பட்டது இரத்தப் பெருக்கும், அதிர்ச்சியுமே மரணத்திற்கு காரணம் என டாக்டர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். விசாரணையின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ட்ரக் மோதி சிறுவன் பலி

(வவனியா)

இராணுவட்ரக் மோதி 6வயதுச் சிறுவன் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்

வவனியா சிங்கள பிரிவு பெரிய உலுக்குளம் என்றஇடத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

சுகத் சம்பத் கருணதாஸா என்ற சிறுவனே பலியானவர் என அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி இராணுவ ட்ரக் சாரதி கோப்ரல் ஜீ. ஆரியசேன வவனியா மாவட்ட நீதிபதி ஆர்.எம்.ஜி ராஜபக்சமுன் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். வி. வில்வராஜா இம்மரணம் விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கியுள்ளார்.

## ப ன் ஊழியர் கைது

(வவனியா)

வவனியா நகரசபை மின்சாரப்பகுதி ஊழியர் வில்வேந்திரன் என்பவர் நேற்று ஆயுதப்படைகளினால் கைது செய்யப்பட்டார்.

## பிரதேசசபைத் தலைவர்

[வவனியா]

வவனியா தெற்கு தமிழ் பிரிவு பிரதேசசபைத் தலைவராக நெளுக்குளம் கிராமோதய சபைத்தலைவர் திரு. என். சேனாதிராஜா ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் ஒரு சமூகசேவையாளர் என்பது குறிப்பிடத்தக்கது

வவனியா பம்பைமடுவினை பிறப்பிடமாகக் கொண்ட இவர் வவனியா கூட்டுறவு அலுவலகத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றுகின்றார்.

## தொடர்ந்து செயல்படமுடிவு

[யாழ்ப்பாணம்]

பரியோவான் முதலுதவிக் குழுவும் [கோண்டாவில் பிரிவு] ஆரம்ப சுகாதாரப் பிரிவும் [கோண்டாவில்] அண்மையில் இணைந்து நடத்திய கூட்டத்தில் இரு குழுக்களும் தொடர்ந்து இணைந்து செயல்படுவதென முடிவு செய்யப்பட்டது.

ஆரம்ப சுகாதாரப் பிரிவுத் தலைவி திருமதி விஜயமூர்த்தி இக்கூட்டத்தில் உரையாற்றியபோது முதலுதவிப் படைகளின் கடமை கண்ணியம் பற்றி பாராட்டினார். கோண்டாவில் பிரிவின் அத்தியட்சகர் திரு. இ. சந்திரதாஸ் உரையாற்றுகையில் நாட்டின் இன்றைய நிலையில் முதலுதவியின் அவசியத்தைப் பற்றிக்குறிப்பிட்டதுடன் முதலுதவியின் சேவையில் பாரபட்சமும் ஏற்றத்தாழ்வு காண்பித்தலும் முற்றாக கைவிடப்படவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# சகல அமைப்புகளுடனும் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த அ. தி. மு. கழகம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறும், மற்றும் தமிழினத்தை பாதிக்கும் சட்டங்களை வாபஸ் பெறுமாறும் கோரி சகல அமைப்புகளுடனும் சேர்ந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்த யாழ். அண்ணு தி. மு. கழகம் தீர்மானித்துள்ளது.

யாழ். சிவன் கோவிலடியில் உள்ள கட்டடத்தில் நேற்று திரு பொன். மதிமுகராசா தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், பல பொது சன அமைப்புப் பிரதிநிதிகளும், முன்னுள் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். (க)

## அம்புலன்ஸ் இல்லாது ஆஸ்பத்திரிபடும்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர்ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் அவசரம் தேவை என்பதை யாழ். சுகாதாரப் பகுதியினரிடம் யாழ். வைத்திய அத்தியட்சகர் மீண்டும் வலியுறுத்தவிருக்கிறார்.

தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் ஒரு அம்புலன்ஸ் மட்டுமே இருக்கின்றது. இந்த அன்புலன்ஸ் 12 வருடங்களுக்குமுன்னர் இங்கு அனுப்பி வைக்கப்பட்டதாகும். [க]

## "ரெலோ இயக்கப் போராளி"

(வவுனியா)

தாண்டிக்குளத்தில் கடந்த சனிக்கிழமை ஆயுதப்படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டவர் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த பொராளியெனத் தெரியவருகிறது.

லிங்கன் என்றழைக்கப்படும் இவர் ஒருபிரிவின் தலைவர் என்று கூறப்படுகிறது, இவரது சடலம்நேற்று மிகுந்த மரியாதையுடன் தகனம் செய்யப் பட்டது.

## 2 வர்த்தகர்களும்--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கம் ஆலோசிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் மூன்று தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டனர். [க]

## இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

நேற்று முன்தினம் காலை கல்லடியில் பொலிஸ் அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் பலியானர். (ய)

## மரண அறிவித்தல்

### திரு. மருதடியார் வைத்திலிங்கம் (நயினதீவு)

நயினதீவு பிரபல சிற்பக்கலைஞர் மருதடியார் வைத்திலிங்கம் காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், கந்தசாமி. நீலாயதாட்சி (ஆசிரியை), தட்சணமூர்த்தி, நடேசமூர்த்தி ஆகியோரின் அன்புத்தந்தையும். கமலாதேவி, செல்வராசா (படவரைஞர்), பாலாம்பிகை, விஜயலட்சுமி (ஆசிரியை), ஆகியோரின் அன்பு மாமனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று (11-02-1986) செவ்வாய்க்கிழமை மாலை நயினதீவில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்ரேம்.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.
1-ம் வட்டாரம், நயினதீவு, 10-02-86, (C 698)

### தம்பு இரத்தினம் பொன்னம்மா

யாழ்ப்பாணம், நீராவியடியைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சிவபதம் அடைந்தார் அன்னர் காலஞ்சென்ற திரு. இரத்தினம் (இளையகுட்டி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சுப்பிரமணியம் நாகரத்தினம் (கோலாலம்பூர் மலேசியா), நடராசா இளைப்பாறிய நிர்வாக அதிகாரி கல்விஇலாகா/விவசாய இலாகா முல்லைத்தீவு), மாணிக்கராசா (இளைப்பாறிய, இராணுவ அதிகாரி), சண்முகராசா (France) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற திரு சுப்பிரமணியம் (மலேசியா) திருமதி நாகேஸ்வரி, பவளேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருஞானம், சிவஞானம், பரஞானம், நிவேதிதாதேவி (மலேசியா), ஜெயந்தி, சுகந்தி, பிரியந்தி, சந்திரிகா, ராஜராஜன் ஆகியோரின் அன்பு பேத்தியாருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை 11-2-86 (இன்று) காலை 10 மணியளவில் இல; 5 ரெயில்வே கடவை வீதி நீராவியடி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ. நடராசா

C 693

# "கம்பனின் சாதனை இன்றுவரை முறியடிக்கப்படவில்லை"

## 'கம்பன்தமிழ்க்கோட்டம்' அடிக்கல்நாட்டுவிழாவில் 'வித்தி'

[யாழ்ப்பாணம்]

"கம்பன் படைத்த மாபெரும் காப்பியமான கம்பஇராமாயணம் தமிழிலக்கியப் பரப்பில் மட்டுமன்றி அனைத்துலக மொழிகளின் இலக்கியப் பரப்பிலும் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கது" 'கம்பன் தமிழ்க்கோட்டம்' அடிக்கல் நாட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசும்போது யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற இவ் விழாவில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் மேலும் கூறியதாவது: "கம்பனின் மாபெரும் காப்பியம், தமிழ்ப் பண்பாட்டின் கலைக்களஞ்சியம் ஆகும். கம்பனின் இக்கவித்துவசாதனை அவருக்குப் பின்வந்த கவிஞர் பலருக்கு ஆதர்சமாக அமைந்தது, ஆயினும் இற்றைவரை கம்பனது இச்சாதனை எவராலும் மீறப்படவில்லை"

"இங்கு அமையவிருக்கும் கம்பன் தமிழ்க்கோட்டம்ஈழத்தின் கம்பராமாயண ஆய்வின் மத்திய நிலையம் எனத்தக்க வகையில் சிறப்புற்று ஓங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்

'ஈழத்திற் கம்பனுக்கு இத்தகைய கோட்டம் அமைவதிலே ஒரு முக்கிய பொருத்தப்பாடடையும் நாம் இங்கு சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்ரேம். இராம கதையிலே ஈழத்திற்கு முக்கிய பங்குண்டு. இங்குதான் காவிய நாயகியாகிய சீதை சிறையிருந்தாள். அநியாயமும் அக்கிரமமும் மிக்க அரக்கர் கூட்டத்தின் மத்தியில் சிறை வைக்கப்பட்ட அவளை மீட்பதற்குத்தான் இராமரும், இலக்குமணரும் இங்கு வந்தனர். அவர்களால் இங்கு அதர்மம் அழிந்து தர்மம் நிலைபெறும் என்ற உண்மையையும் நாம் படுந்துயரங்களுக்கு எதிர்காலத்தில் நிச்சயம் விடிவு உண்டு என்ற நம்பிக்கையையும் தரும் சான்ருகவும் திகழப்போகின்றது.

"இக்கோட்டத்திலே கம்பன் தொடர்பான ஆய்வுநூல்கள், கட்டுரைகள் தொகுத்து வைக்கப்படவேண்டும். அத்துடன் அனைத்துலக நிலையில் நிகழும் ஆய்வுத் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளத்தக்க தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். கம்பராமாயணப் பிரதிகள் விலைக்கு வாங்குவதற்கு ஈழத்தில் முடியாமலிருக்கின்றது. எல்லாக் காண்டங்களிலும் சில பிரதிகளைப் பெற்றுவைப்பது பயனளிப்பதாகும்."

யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் மங்கள விளக்கேற்றிவைக்க, நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் விழா ஆரம்பமானது.

தொடக்கவுரையை "ஈழநாடு" நிர்வாக ஆசிரியர் திரு. ந. சபாரத்தினம் நிகழ்த்தினுர். அவர் தமது உரையில்; "இங்கிலாந்து மக்கள் தம் நாட்டில் எதனையும் இழக்க விரும்பினுலும் மகாகவி ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களை இழக்க விரும்பவில்லையென்று கூறுவது இயல்பு. இதே போன்று கவிதை, நாடகம் போன்ற யாவும் ஒருங்கிணைந்து கலந்துநிற்கும் கம்பராமாயணத்தையும் இதனை வடித்த கம்பனையும் நாம் மறக்கத்தயாரில்லை. எனவேதான் 1964ல் ஆரம்பமான 'கம்பன் கழகம்' சிறிதுகால 'தொய்வு' நிலை அடைந்திருந்த போதிலும் மீண்டும் புத்தொளிபெற்று இன்று 'கம்பன் கோட்டம்' அமைக்கவுள்ளது.' என்ருர்.

கம்பன்கழக அமைப்பாளர் திரு. எஸ். ஜெயராஜ் தமது வரவேற்புரையில்; கம்பன் கழகத்திற்கு 'கம்பன் கலைக்கோட்டம்' கட்டுவதற்குக் காணி வழங்கிய நல்லூர் ஆலய முதலாளியையும், இக்காணியைப் பெற்றுத்தந்த யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ.வீ.கே. சிவஞானத்தையும் பெரிதும் பாராட்டி நன்றியும் தெரிவித்தார்.

மேலும் பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள் உட்படப் பலர் பேசினுர்கள். [ஐ]

## கிராமோதய தலைவர்கள் சந்திப்பு

(வவனியா)

வவனியா மாவட்டத்தைச் சோந்த சகல கிராமோதய சபைத் தலைவர்களையும் இம் மாதம் 19-ம் திகதி வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் சந்திக்க உள்ளார்.

திட்டமிடல் பணிமனை அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம் பெறும்.

திட்டமிடல் பிரிவும், உள்ளுராட்சி இலாகாவும் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளனர்.

## விசர்நாய் கடித் தொல்லை அதிகரிக்கிறது

[யாழ்ப்பாணம்]

விசர்நாய் கடிக்கு ஊசி மருந்து ஏற்றுவதற்காக நேற்று இருவர் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளனர்.

இதேபோன்று பருத்தித்துறைசாவகச்சேரி மற்றும் பல இடங்களிலிருந்தும் விசர்நாய் கடிக்கு ஊசி ஏற்றுவதற்காக யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைத் தவிர மற்றைய ஆஸ்பத்திரிகளில் இம்மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது [க]

## அடிக்கல்நாட்டும்வைபவம் நேற்றிரவுநடந்தது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நிறுவும் 'கம்பன் தமிழ்க் கோட்டத்'துக்கான அடிக்கல்லை நேற்றிரவு 7-10-க்கு சுபநேரத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வீகே. சிவஞானம் நாட்டி வைத்தார்.

நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் வடக்குப் புறமாகவுள்ள கோவில் வீதியில் அமைந்துள்ள காணியிலேயே கம்பன் கோட்டத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

மாநகரசபை ஆணையாளரைத் தொடர்ந்து பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் உட்படப் பலர் கல்நாட்டினுர்கள்.

ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக் கோட்டத்தின் கீழ்ப்பாகம் ஐந்து அறைகளையும், மேல் மாடியில் கருத்தரங்கு மண்டபம், நூல் நிலையம் என்பனவும் அமையும். இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்துக்குள் இவை அமைக்கப்பட்டுவிடும் என்று இதன் அமைப்பாளர் திரு. ஜெயராசா தெரிவித்தார். (ஐ)

## நினைவு...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டிகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுவருது குறிப்பிடத்தக்கது விழாவுக்கான ஒழுங்குகளை சாரண ஆசிரியை செல்வி. எஸ். பரம்தேவராசா மேற்கொண்டுள்ளார்.

## உடன்பாட்டை....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படையிலிருந்து கூட்டணி மாருது இருந்திருப்பின் தமிழர் பிரச்னைக்கு இம்மட்டில் தீர்வுகாணப்பட்டிருக்கும். பிரச்னையைத் தீர்க்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தமிழ்க்குழுக்களை ஈடுபடுத்தும் பொறுப்பு இந்திய அரசையே தற்போது சாரும்" என்ருர்.

"கடந்த காலத்தில் பெரிய கருத்துவேறுபாடுகட்கும் தீர்வு காணப்பட்டிருக்கிறது. எனவே தற்போதைய நிலைமைகுறித்து நாம் அவநம்பிக்கைகொள்ளத்தேவையில்லை. தமிழீழம்; வடக்கு, கிழக்கு இணைப்புக்கு அரசு ஒத்துவராது" என்றும் அமைச்சர் திரு, லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

இதேநேரத்தில் பிரான்ஸ் செய்தி ஸ்தாபனத்துக்கு அமைச்சர் லலித் அத்துலத்முதலி அளித்த பேட்டியில்; பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இந்தியா உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

"பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போகும் சகல குழுக்களுடனும் இந்தியா நல்லநிலையில் இருப்பதால் இது சாத்தியப்படும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மாலைதீவில் "இலங்கை அரசுக்குப் பேச்சுவார்த்தையில் ஆர்வமில்லாவிடில் எம்மிடம் கூறிவிடவேண்டும்" என்ற கோரிக்கைக்கு பதிலளிக்கு முகமாகவே அமைச்சர் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினுர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org